மலேசியாவின் உலக இஸ்லாமியத் தமிழ் மாத இதழ்

# நம்பிக்கை

# NAMBIKKAI


MAJALAH BULANAN ISLAM - ISLAMIC MONTHLY MAGAZINE
R. Awal 1432 PP9434/6/2011(024671) RM 3.00 February 2011












## எக்காலத்திற்கும் ஏற்ற அருள்மறை!



## அல்லாஹ் கூறுகின்றான்

"எங்கள் இறைவனே! எங்களை நேர்வழியில் செலுத்திய பின்பு எங்கள்
இதயங்களை நேர்வழியிலிருந்து பிறழச் செய்திடாதே! மேலும், எங்களுக்கு
உன் அருளிலிருந்து கொடை வழங்குவாயாக! திண்ணமாக, நீயே
உண்மையில் தாராளமாக வழங்குபவனாய் இருக்கின்றாய்!"

(திருக்குர்ஆன் 3: 8)

## நபிமொழி

*பஷீர் பின் ஸஅத் (ரலி) அறிவிக்கிறார்கள்:
ஒருமுறை அண்ணலாரிடம் பின்வருமாறு கேட்டேன்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்)
அவர்களே! நாங்கள் உங்களுக்காக எவ்வாறு 'ஸலவாத்' ஓத வேண்டும்?"
நபி (ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பின்னர் கூறினார்கள்:
"என் மீது 'ஸலவாத்' இவ்வண்ணம் கூறுங்கள்!"*

*அல்லாஹும்ம ஸல்லி 'அலா முஹம்மதின் வ' அலா ஆலி முஹம்மதின் கமா
ஸல்லைத்த 'அலா இப்ராஹீம வ' அலா ஆலி இப்ராஹீம வபாரிக 'அலா முஹம்மதின்
கமா பாரக்த 'ஆலா இப்ராஹீம வ' அலா ஆலி இப்ராஹீம ஃபில்' ஆலமீன
இன்னக ஹமீதுன்ம் மஜீத்.*

Reprinted with the permission of:
AL -QUR'AN Tamil Translation:
Islamic Foundation Trust
AL - HADIS: SAHIHUL BUKHARI (Tamil):
Rahmath Trust
With the Compliments of Yayasan Ubaidi

# நம்பிக்கை

பிப்ரவரி 2011


வெளியிடுபவர் &
கௌரவ ஆசிரியர்
டத்தோ டாக்டர்
ஹாஜி முஹம்மது இக்பால்

புரவலர்கள்
டத்தோ ஹாஜி பரக்கத் அலி
டத்தோ டாக்டர் ஹாஜி ஹனீஃபா
டத்தோ ஹாஜி S.M. ஸலாஹுத்தீன்

நிர்வாக ஆசிரியர்
சஹிபுத்தீன் அப்துல் காதிர்

பொறுப்பாசிரியர்
ஃபிதாவுல்லாஹ்


ஒரு வருடச் சந்தா விபரம்

| | |
|---|---|
| மலேசியா | RM 50.00/- |
| சபா & சரவா | RM 55.00/- |
| சிங்கப்பூர் | S$ 50.00/- |
| புருணை | B$ 50.00/- |
| இதர நாடுகள் | US$ 30.00/- |

**YAYASAN PENDIDIKAN ISLAM**
எனும் பெயருக்கு Cheque
அல்லது Bank Draft
அனுப்பலாம்.

CIMB வங்கியில்
1244 0001102054 கணக்கில்
சந்தாவை செலுத்தியபின்
வங்கி ரசீதுடன் (Bank-in slip)
பெயர் முகவரியை
இணைத்து அனுப்பவும்.

Postal Order
ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.


NAMBIKKAI,
Wisma Iqrah
9, Jalan PJS 8/17,
Mentari Business Park,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan,
Malaysia.

Hp : 019 2786 956
Fax: 603 5630 0570
Email:nambikkai@gmail.com



Edaran naskah percuma
majalah ini bagi
institusi - institusi adalah
dengan Ehsan
Majlis Agama Islam
Wilayah Persekutuan.



5 தலையங்கம்
ஹலால் - ஹராம் - வெட்டு ஒன்று! துண்டு இரண்டல்ல!

6 உழைப்பு
உழைப்பாளியின் கையை முத்தமிட்ட உத்தம நபி (ஸல்)

9 பண்பு
பெரியோரை மதித்தல்!

11 ஊடகம்
சிரிப்பைத் தவழவிடுங்கள்!

12 நோன்பு
ரமதான் அல்லாத நோன்புகள்!

16 அனுபவம்
மறக்க முடியாத சிஸேரியன்!

19 கவிதை
அந்தப் பெயர்!

20 தலைமை
இஸ்லாத்தில் பெண்களின் தலைமைத்துவம்!

24 முகப்புக் கட்டுரை
எக்காலத்திற்கும் ஏற்ற அருள்மறை

30 முகப்புக் கட்டுரை
அல்லாமா யூசுஃப் அலி

32 பாங்கு
தொழுகைக்கான பாங்கு!

35 வழக்கு
புஷ்ஷைச் செருப்பால் அடித்தவர்

73 சிறப்புக் கட்டுரை
மனங்களைக் கவர்ந்தவர்


76 சிறுகதை
சுமப்பது தெரியாத சுமைதாங்கி

48 உரத்த சிந்தனை
ரிஸ்க் எடுப்பது ரஸ்க் சாப்பிடுவது போலல்ல!


## இந்த இதழில்...!

திருக்குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் அல்லாமா அப்துல்லாஹ் யூசுஃப் அலியின் இரண்டாவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவு இஸ்லாமியக் கல்வி வாரியமும் இஸ்லாமிக் புக் ட்ரஸ்ட்டும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. முன்னாள் பிரதமர் துன் அப்துல்லாஹ் அஹமது பதாவி, கனடாவின் அறிவியல் அறிஞர் டாக்டர் முஸஃப்பர் இக்பால், இஸ்லாமிக் புக் ட்ரஸ்ட் தலைவர் பேராசிரியர் ஒஸ்மான் பக்கர், இஸ்லாமியக் கல்வி வாரியத் தலைவர் டத்தோ முஹம்மது இக்பால் ஆகியோர் உரையாற்றிய காட்சியைத் தான் அட்டையில் காண்கிறீர்கள். முகப்பில் அப்போது வெளியீடு கண்ட குர்ஆனின் ஆய்ப்பூர்வமான தகவல் திரட்டு நூலையும் பார்க்கலாம்.

இது பெருமானார் (ஸல்) அவர்களின் புகழ் பாடும் மாதமல்லவா! எனவே, இந்த இதழில் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறப்புகளைக் கூறும் பல்வேறு கட்டுரைகளைத் தந்திருக்கிறோம். படித்துவிட்டுச் சொல்லுங்கள்.




## இலக்கியத்தை இலக்கியமாக...!

நம்பிக்கையின் அட்டையைப் பார்த்தவுடன் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. மலேசியாவில் இலக்கிய மாநாடு என்னும் இனிப்பான செய்தி இடம் பெற்றிருந்தது. மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்ய அமைக்கப்பட்டுள்ள குழுவைப் பார்த்தபோது யாரும் இதில் விடுபட்டுவிடவில்லை என்றே தோன்றுகிறது. எல்லா அமைப்பைச் சார்ந்தவர்களும் இலக்கியவாதிகளும் இருக்கின்றார்கள். மாநாடு வெற்றி பெற வாழ்த்துகள்.

**ஷேக் தாவூது**
கோலாலம்பூர்.

“இலட்சிய வாழ்வுக்கு இஸ்லாமிய இலக்கியம்” கருப் பொருளே அருமையாக உள்ளது. இலக்கியத்தை வெறும் சுவைக்காக படிக்காமல் வாழ்க்கைக்கும் அதனைப் பயன்படுத்தலாம் என்ற கருத்து அதில் உள்ளது. கடந்த காலங்களில் இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழ் உலகிற்கு பல அரிய படைப்புகளைத் தந்திருக்கிறது. ஏனோ அதனை யாரும் பொருட்படுத்துவதில்லை. சமீபத்தில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் ஒரேஒரு முஸ்லிம் அறிஞரின் பெயரைக்கூட அவர்கள் நினைவுகூரவில்லை என்பது வருத்தமளிக்கிறது. இலக்கியத்தை இலக்கியமாகப் பார்க்க வேண்டுகிறேன்.

**அய்யம்பேட்டை தாஜுத்தீன்,**
கோலாலம்பூர்.

## இஸ்லாம் எங்கள் வழி....

இலட்சிய வாழ்விற்கு இஸ்லாமிய இலக்கியம் தலையங்கம் படித்தேன். ‘இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி’ என்பது காலம் காலமாக நாம் சொல்லி வருவதை நினைவு படுத்தி இருந்தீர்கள். இவ்வாண்டு மே திங்களில் நடைபெற இருக்கும் மாநாடு மூலம் மலேசிய வாழ் இந்திய முஸ்லிம்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பாட்டாலே போதும் மாநாடு வெற்றி அடைந்த மாதிரிதான்.

**ஹாஜி மதார்,**
ஈப்போ.

## வியட்நாம் – தமிழ் முஸ்லிகள்...!

வியட்நாம் – தமிழ் முஸ்லிம்களின் சொர்க்க பூமி! கட்டுரையைப் படித்து வியந்தேன். ஒரு நாட்டின் வர்த்தகத்தை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு சமுதாயம் இன்று பெயர் சொல்லக்கூட அங்கு இல்லை என்று பார்க்கும் போது வேதனைதான் மிஞ்சுகிறது. தென்கிழக்காசியா முழுவதும் வாழ்ந்த நமது முன்னோர்களின் பதிவை தயவு செய்து செய்யுங்கள். வரலாறு இல்லாத சமுதாயமாகி நாம் ஆகிவிடக்கூடாது. வர்த்தகத்தில் உலகெங்கும் கொடி கட்டிப் பறந்த தமிழ் முஸ்லிம்கள் இன்ஷா அல்லாஹ் மீண்டும் கோலோச்சுவார்கள். அதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

**முஹம்மது இஸ்மாயில்,**
பினாங்கு.

விடியலைத் தேடும் விழிகளுக்கு
அமைதி தேடும் ஆத்மாக்களுக்கு
தன்னம்பிக்கை உரமூட்டும்
நம்பிக்கை மாத இதழ் மென் மேலும் வளர வாழ்த்துகள்.
அல்லாஹ் அருள் புரியட்டும்.

அப்துல் ஸலாம்,
ஐடியல்விஷன்.பிளாக்ஸ்பாட்,
துபாய்.

## நூலாக்கவும் செய்யுங்கள்!

யூதர்களைப் போல் ஏன் இல்லை முஸ்லிம்கள்? சிந்தனையைத் தூண்டும் கட்டுரை. முதன்முறையாக மலேசியத் தலைநகரில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற இருப்பதை வரவேற்கிறேன். எல்லாரும் ஒன்றுபட்டு அதனை நடத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

வியட்நாம் தமிழ் முஸ்லிம்களின் சரித்திரம் படித்து வேதனைப்பட்டேன். பர்மாவிலும் அதே நிலைதான். பிறந்த நாட்டைவிட்டு அவர்கள் விரட்டப்பட்டார்கள். இந்தியாவில் அகதிகளைப் போல் தஞ்சம் புகுந்தார்கள். இன்று இலங்கையிலிருந்து வரும் தமிழர்களுக்கு துணையாக ஊடகங்கள் இருக்கின்றன. பன்னாட்டளவில் அவர்களுக்காக குரல் எழுப்புகிறார்கள். ஆனால், அன்று பர்மாவிலிருந்து சென்ற அகதிகளை ஆதரிக்கவோ அவர்களது செய்திகளை வெளியிடவோ பெரிய அளவில் பேசவோ அப்போது எந்த

ஊடகமும் இல்லை. அதனால், அவர்கள் பட்ட துன்பங்களும் வேதனைகளும் வெளிவராமலேயே போயின. இதுபோன்ற வரலாற்று உண்மைகளை நம்பிக்கையில் பதிவு செய்வதோடு அதனை நூலாக்கவும் வேண்டும்.

**ஹாஜி அப்துல் ரசாக்,**
கோலாலம்பூர்.

## இலக்கியத்தை இலக்கியமாக...!

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு பற்றிய அறிவிப்பு படித்ததில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஆயத்தப் பணிகள் இப்போதிருந்தே முடுக்கிவிடப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. இம்மாநாடு நிச்சயமாக வெற்றிபெறும். இந்த நாட்டில் இஸ்லாமிய இலக்கியத்திற்கும் ஒரு மைல் கல்லாக மாநாடு அமையப் போகிறது என்றால் அது மிகையல்ல. மைதீ. சுல்தானின் சிறுகதையைப் படித்தேன். மிக அருமையாக கதையைச் சொல்லி இருந்தார். எதார்த்தமான முறையில் அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்வை படம் பிடித்துக் காட்டி தன் பக்கம் வாசகர்களை இழுத்துக் கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும். நாட்டின் மந்திரிகளிலிருந்து சாதாரண குடிமகன் வரை வம்புக்கு இழுத்திருக்கிறார். மொத்தத்தில் ஜனவரி இதழுக்கு ஜே!

**ரவீந்திரன் தனபாலன்.**
சிரம்பான்.

## 1990லிருந்து மாநாட்டை எதிர்பார்த்திருக்கிறேன்...!

மலேசியாவில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு எதிர்வரும் மே மாதம் நடக்கவிருக்கும் முழு விவரச் செய்தியை நம்பிக்கை இதழிலும் நாளிதழ்களிலும் படித்து தெரிந்து கொண்டேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

சுமார் 21 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 31.12.1990 அன்று தமிழ்நாடு கீழக்கரையில் நடைபெற்ற ஐந்தாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. பன்னாட்டு அறிஞர்களும், இலக்கியவாதிகளும் கலந்துகொண்டு சிறப்பு செய்த அந்த மாநாட்டுக் காட்சி இன்னும் என் மனத்தளவில் உறைந்து கிடக்கிறது. அம் மாநாட்டில் உரையாற்றவும் பேராளர்களாக கலந்துகொள்ளவும் நமது நாட்டைப் பிரதிநிதித்து பலர் வந்திருந்தார்கள். அங்கே, அப்போது உரையாற்றிய அன்றைய அமைச்சர் மாண்புமிகு டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் இது போன்ற மாநாடு ஒன்றை அடுத்த முறை எங்கள் மலேசிய நாட்டில் நடைபெறும் என்றும் அறிவித்தார்கள். அதனை அன்றைய முன்னணி தலைவர் டான்ஸ்ரீ உபைதுல்லாவின் ஒப்புதலோடு அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்போது மகிழ்ச்சியில் துள்ளி குதித்தவர்களில் நானும் ஒருவன். ஆனால், நான் அடைந்த சந்தோஷம் எட்டி எட்டி குதித்து எட்டாக்கனியாகி, ச்சீ... ச்சீ... இது புளித்த பழம் என்று கூறும் நரியின் கதையாகிவிட்டது. கடந்த 21 வருடத்தில் எந்த அறிவிப்பும் இல்லாமல் புதைந்து போனது.

என்றாலும், இறைவன் நம்மைக் கைவிடவில்லை. தற்போது நமது நாட்டில் அம் முயற்சியில் தெளிவான அறிஞர்களைக் கொண்ட குழுவை உருவாக்கி, ஆக்கரமான செயல்பாடுகளை மேற்கொண்டு பணியைத் தொடர்ந்திருக்கிறீர்கள். (இன்ஷா அல்லாஹ்) மாநாடு வெற்றி பெற வேண்டும். இறைவன் நம்மை கைவிடமாட்டான் என்று நம்புவோம். நீண்ட நாள் கனவு நனவாகப் போகிறது.

இந்த மாநாட்டின்வழி நமது போராட்டம், நமது சேவைகள், இழந்த இலக்கியங்கள், இலக்கியவாதிகள், நாட்டின் விழிப்புணர்வுக்கு போராடியவர்கள் அனைவரின் வரலாறும் சேவைகளும் வெளிக்கொணர வேண்டும். குறிப்பாக இந்த நாட்டில் தமிழ் முஸ்லிம்களால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பள்ளிவாசல்கள், பள்ளிகள், கல்விக் கூடங்கள் பற்றி பதிவு செய்யப்பட வேண்டும். நமது கட்டுப்பாட்டிலிருந்து கைமாறியவை எத்தனை? அதில் அழிந்துபோனது எத்தனை? ... இவையெல்லாம் அறியப்பட வேண்டும்.

தமிழ் முஸ்லிம் இலக்கியவாதி முன்ஷி அப்துல்லாஹ் அவர்களின் வரலாறு இந் நாட்டு இலக்கியத்தில் இடம்பெற வேண்டும். அவரைப் பற்றிய வரலாறு முன்பு பாடப் புத்தகத்திலிருந்தது. தற்போது நீக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவர் இந்திய முஸ்லிம் வழித்தோன்றல்தான் என்று நிறுவி மலாய் நாட்டிற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இளம் தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்நாட்டு முஸ்லிம்களை தலைநிமிர வைத்தும் ஒற்றுமையை ஏற்படுத்திய நாதிரா விவகாரம் முஸ்லிம்களின் உணர்வையும் உணர்ச்சியையும் தட்டி எழுப்பி அன்னியருக்கு எதிராக, உரிமைக்குப் போராடிய தியாகி அறிஞர் அல்லாமா கரீம் கனி அவர்களை இந்நாடு மறக்க முடியுமா? அவரையும் மாநாட்டில் நாம் நினைவு கூர வேண்டும்.


நாதிரா என்ற பெயரை உச்சரிக்கும்போதே அந்த போராட்டவாதியின் பெயரும் நினைவுக்கு வர வேண்டும். தற்கால இளம்தலைமுறையினருக்கு இது எத்தனை பேருக்குத் தெரியும்? அவரது நினைவாக நினைவகம் உருவாக்கப்பட வேண்டும். மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**ஹாஜி எம். இப்ராஹீம்,** தாமான் ஸ்ரீஅண்டலாஸ், கிள்ளான்.

# MAHSA UNIVERSITY COLLEGE

KPT/JPT/DFT/US/W16

## Rewarding Careers in Healthcare Begin at MAHSA




## MASTERS • BACHELOR DEGREES • DIPLOMA • CERTIFICATE COURSES

***Diploma***

- Nursing KPT/JPS (KN5974) 02/10 MQA
- Pharmacy KPT/JPS (KA6495) 10/10 MQA
- Physiotherapy KPT/JPS (KA6146) 05/10 MQA
- Medical Imaging (Radiography) KPT/JPS (KA6493) 10/10 MQA
- Medical Lab Tech MQA  
  KPT/JPS (KA6494) 12/10
- Environmental Health MQA  
  KPT/JPS (KA6460) 10/10
- Dental Technology  
  KPT/JPS (KA7084) 01/12

***Certificate***

- Dental Surgery Assistants  
  KPT/JPS (KA7083) 01/12

***Pre-University Studies***

- Foundation in Science  
  KPT/JPS (KA9348) 12/13

***Degrees***

- Bachelor of Medicine Bachelor of Surgery (MBBS)  
  KPT/JPS (KA10402) 04/14
- Doctor of Dental Surgery (DDS)  
  KPT/JPS (KA10533) 08/4
- B.Sc. (Hons) Nursing Studies (4+0)  
  University of Teesside (UK) KPT/JPS (KA6675) 02/11
- B.Sc. (Hons) Nursing Practice Development MQA  
  Top-Up Degree, Northumbria University (UK)  
  KPT/JPS (KA6722) 02/11
- B.Sc. (Hons) Biomedical Sciences (4+0)  
  Northumbria University, UK KPT/JPS (KA9557) 06/14
- B.Sc. (Hons) Physiotherapy (4+0)  
  Northumbria University, UK  
  KPT/JPS (KA7979) 01/13
- M Pharm (2+2)  
  Liverpool John Moores University (UK) KPT/JPS (KA7721) 08/14

***Masters***

- MSc. Nursing  
  Northumbria University (UK)  
  KPT/JPS (KA9035) 01/14
- MSc. Advanced Healthcare (Intl.)  
  Liverpool John Moores University (UK)  
  KPT/JPS (KA9349) 01/14

***Loans / Scholarships / Sponsorships***

- PTPTN (WL1) loan granted for all eligible applicants for the entire duration of studies.
- Private Hospital sponsorship for candidates with good results.
- Scholarships are also available.

*For registration, please bring along original and photocopy of your SPM/STPM results slip & Mykad, together with a passport-size photograph.*

*Partner Universities:*

northumbria UNIVERSITY · TEESSIDE · University of the West of England UK · JMU

*Accreditation & Approvals:*

MQA

*Approved by the Ministry of Higher Education. MOHE KPT(JPS)600-07/82/Jld.1(10) Dated 13 March 2009*


**MAHSA UNIVERSITY COLLEGE**

**Pusat Bandar Damansara Campus (PBD)**  
Level 6, Block A, Pusat Bandar Damansara,  
Damansara Heights, 50490 KL, Malaysia.  
Tel: **+603-2092 9999 / 2093 8992**  
Fax: **+603-2093 1599**

**Jalan Universiti Campus (JUC)**  
Jalan Elmu off Jalan Universiti,  
59100 KL, Malaysia.  
Tel: **+603-7960 6992**  
Fax: **+603-7960 7992**

Toll Free : **1800 88 0300**  
Email : **marketing@mahsa.edu.my**  
Enquiries : **www.mahsa.edu.my**

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ
இறைநம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்

நம்பிக்கை

மலர் : 15 இதழ் : 2/163

# ஹலால் – ஹராம் வெட்டு ஒன்று; துண்டு இரண்டல்ல!

இஸ்லாமிய ஷரிஅத் சட்டம் தடுக்கப்பட்டவை எவை, விலக்கப்பட்டவை எவை என்பதை பிரித்துக் கூறுகின்றது. எனவே, ஹராம் – தடுக்கப்பட்டவை யாவன என்பதை தீர்மானிக்க தெளிவான முடிவான விளக்கங்கள் உள்ளன. ஆனால், 'ஹலால்' – அனுமதிக்கப்பட்டவை எவை என்பதற்கு பட்டியல் கிடையாது. ஒவ்வொரு தடுக்கபட்ட பொருள் – செயலுக்கு, அதன் வட்டத்திற்கு அப்பால் உள்ள அனைத்துமே 'ஹலால்' – அனுமதிக்கப்பட்டது என்றே பொதுவாகக் கொள்ளப்படும்.

நடப்பில் 'ஹலால்' வட்டத்திற்குள் இருக்கும் – இயங்கும் ஒவ்வொன்றையும் தேவைக்கு அதிகமாக, இன்னும் சொல்லப்போனால் ஒரு கோணத்தில் நுட்பமாக ஆராய்ந்து, தர்க்க ரீதியாக 'ஹராம்' என்ற அட்டையை எதிலும் ஒட்டலாம். அப்படிச் செய்வதின் உள்நோக்கத்தில் ஒரு படி உயர்ந்து நிற்கின்றோம் என்ற எண்ணம் இணைந்திருக்கின்றது. இதனால்தான் 'ஹராம்' உபயோகத்தை 'ஹத்' – வரம்பின்றி அனுமதிக்கப்பட்ட அனைத்திலுமே குறைகாண சிலர் வற்புறுத்துகின்றனர்.

இந்தக் கருத்துகளை – 'ஃபத்வா'க்களை – ஷரிஅத் சட்டம் என்று நம்பி பலர் யதார்த்த இயல்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். உயர்நிலைக்கு தாவும் தப்பெண்ணம் கொண்டு அனுமதிக்கப்பட்டவைகளைக்கூட ஹராமாக்கிவிடுகின்றனர்.


திருமறை எடுத்துரைக்கும் ஷரிஅத் சட்டங்கள் பொதுவானவை. ஒரு குறித்த பூகோள – கலாசார – சூழ்நிலைக்கேற்ப அச் சட்டங்கள் ப்படி செயல்படும்; செயல்பட வேண்டும் என்பதை சட்ட வல்லுனர்கள் பிரித்துப் பார்த்து வரம்புகளை அமைத்துள்ளனர். இதனை 'ஃபிக்ஹு' எனக் கூறுவர். இந்த வரம்புகள் ஷரிஅத் சட்டங்களுக்கு உட்பட்டே இயங்க வேண்டும். இந்த வரம்புகள் வகுக்கப்பட்டு சூழ்நிலைக்குத் தகுந்த தீர்வுகளை காண்பதே 'ஃபிக்ஹு' கலையின் நோக்கமும் செயல்பாடும் ஆகும். அந்த நீரோட்டத்தின் தாக்கம் ஹலால் – ஹராம் கூற்றை உண்டு – இல்லையென்று ஆக்காமல் ஐந்து நிலைகளாகப் பிரித்து விளக்கியுள்ளனர் 'ஃபிக்ஹு' விற்பன்னர்கள் அப்படிப்பட்ட சிந்தனைகள் உருவாகும்போது 'ஹலால்' அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலிருந்தோ அல்லது 'ஹராம்' – விலக்கப்பட்டுள்ள நிலையிலிருந்தோ விலகும் ஐந்து நிலைகளை அறிந்து நடந்துகொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை.

முதலாவது, இஸ்லாமிய மார்க்கக் கடமைகள். இதனை வாஜிப் என்று கூறுவர். இஸ்லாத்தில், ஒரு முஸ்லிமின் வாழ்வியல் தோற்றத்தையும் பயனையும் நிலைநாட்டும் செயல்கள் அவை. அவை நிறைவேற்றப்படாமல் தேடாமல் விடப்பட்டால் கடமையினின்றும் தவறியதற்கான தண்டனையுண்டு. இரண்டாவது, 'மன்துப்' எனும் பரிந்துரைக்கப்பட்ட செயல்கள். இவைகளைச் செய்வது நலம். விடப்பட்டால் தண்டனை இல்லை. மூன்றாவது, 'முபாஹ்' எனும் நடுநிலை. செய்தாலும் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம். நான்காம் நிலை 'மக்ரூஹ்'. இது விரும்பத்தக்கதல்ல என்பதைக் குறிக்கின்றது. ஐந்தாவது, திடமான கூற்றுதான் 'ஹராம்' – விலக்கப்பட்டது.

ஹலால் – ஹராம் விஷயத்தில் பிரித்துப் பார்க்கும் பகுதிகள், ஷரிஅத் சட்டத்தோடு ஃபிக்ஹு வரம்புகளிலும் தெளிவாக இருக்கும்போது மாற்று முடிவுகளுக்கு அவசியமில்லை. தெளிவான விஷயத்தைக் குழப்புவதும் ஏற்புடையதல்ல!

மௌலவி ஹாஃபிஸ் நாஸிர் அலி
இமாம், மஸ்ஜித் இந்தியா, கோலாலம்பூர்.

# உழைப்பாளியின் கையை முத்தமிட்ட உத்தம நபி (ஸல்)



(ஜும்ஆ) தொழுகை முடிவு பெற்றால் பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 62:10)

இந்த உலகில் ஒரு நியதி இருக்கிறது. எதை நாம் பெற வேண்டுமானாலும் அதற்காக வேண்டி உழைக்க வேண்டும். உழைப்பில்லாமல் எந்த ஒன்றையும் பெற முடியாது. அப்படியே பெற்றாலும் அது நிரந்தரமாக இருக்காது. எனவேதான் இஸ்லாம் சூதாட்டத்தைத் தடை செய்கிறது. காரணம் அதில் வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் உழைப்பின் அடிப்படையில் நடைபெறுவதில்லை.

போட்டி என்பது வேறு சூதாட்டம் என்பது வேறு. போட்டி நடத்தி திறமையாளர்களுக்குப் பரிசு கொடுக்கிறோம் என்றால் அதிலே உழைப்பும் ஆரோக்கியமும் இருக்கின்றன. நபி (ஸல்) அவர்களே தன் தோழர்களுக்கு குதிரை பந்தயம் வைத்து வெற்றி பெற்றவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள்.

சூதாட்டம் வாழ்க்கையைக் கெடுத்துவிடும். சூதாட்டத்தின் மூலம் பணம் படைத்தவர்கள் உழைக்கத் தயாராவதில்லை. கஷ்டப்பட்டு உழைப்பவர்களைப் பார்த்தால் அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது.

உழைப்பை இஸ்லாமிய மார்க்கம் போற்றுகிறது. மேலும் உழைப்பாளிகளுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்கிறது.

உழைத்து உழைத்து கடுமையாகிப் போயிருந்த ஒருவரின் கையை நபி (ஸல்) அவர்கள் முத்தமிட்டார்கள். ஒருவர் தன் கையால் உழைத்துச் சம்பாதித்துச் சாப்பிடுவதைவிடச் சிறந்த உணவு ஏதுமில்லை என்று நபி (ஸல்) சொன்னார்கள். (புகாரி)

உலகில் வந்த எல்லா நபிமார்களும் ஏதோ ஒரு வகையில் உழைப்பாளிகளாகவே இருந்தார்கள். ஆதம் நபி (ஸல்) விவசாயம் செய்தார்கள். ஜக்கரிய்யா நபி (அலை) தச்சராக இருந்தார்கள். தாவூத் நபி (அலை) அவர்கள் இரும்பை உருக்கிப் பெரும் சட்டிகளையும் பானைகளையும் செய்பவராக இருந்தார். நமது நபி (ஸல்) அவர்கள் கைதேர்ந்த வியாபாரியாக இருந்தார்கள்.

நபி (ஸல்) நபியாக ஆவதற்கு முன் கதீஜா அம்மையாரின் வியாபாரப் பொருட்களை சிரியாவிற்கு எடுத்துச் சென்று விற்று நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுத்தார்கள். நபியாக ஆன பிறகு சமூகப்புறக் கணிப்பால் நபி (ஸல்) அவர்கள் வியாபாரத்தில் ஈடுபட முடியவில்லை. நபி (ஸல்) அவர்கள் ஆடுகள் வளர்த்து தோட்டத்தை குத்தகைக்கு விட்டு அதன் மூலம் வரும்

வருமானத்தை ஒரு வருடம் முழுவதும் எடுத்து வைத்து வாழ்க்கை நடத்தினார்கள்.

கடைசி வரை நபி (ஸல்) தம் தேவைகளுக்காக யாரிடமும் கையேந்தி நிற்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும்போது அவர்களுடைய போர்க்கவசம் கொஞ்சம் கோதுமைக்காக ஒரு யூதரிடம் அடமானத்தில் இருந்தது. அப்போதும்கூட தம் சொந்தப் பொருளை அடமானம் வைத்துத்தான் பெற்றிருக்கிறார்கள். யாரிடமும் கேட்கவில்லை.

அபூபக்கர் (ரலி) கலீஃபாவான ஆரம்பத்தில் கொஞ்சம் வியாபாரம் செய்தார்கள். பிறகு அரசாங்க அலுவல்கள் அதிகமாகி விடவே நிர்ணம் செய்யப்பட்ட சம்பளத்தை பெற்றுக் கொண்டார்கள்.


முஸ்லிம்கள் யாரிடமும் கையேந்தி வாழ்கிற வாழ்க்கையை பழகிவிடக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் உபதேசம் செய்தார்கள்.

உங்களில் ஒருவர் கயிறு எடுத்துக் கொண்டு மலைமீது ஏறி விறகு வெட்டி முதுகில் சுமந்து வந்து விற்றுப் பிழைப்பது பிறரிடம் கையேந்துவதைவிடச் சிறந்தது. பிறரிடம் கேட்டால் அவர் கொடுக்கலாம். கொடுக்காமலும் இருக்கலாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி).

நபி (ஸல்) அவர்களிடம் யாராவது கையேந்தி நின்றால் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வை ஏற்படுத்துவார்கள்.

ஒருவர் நபி (ஸல்) அவர்களது சபைக்கு வந்து கையேந்தி நின்றார். தனது வீட்டில் ஏதாவது இருந்தால் எடுத்து வாருங்கள் என நபி (ஸல்) அவரிடம் கூறினார்கள். ஒரு போர்வையை அவர் கொண்டு வந்தார். அதை நபி (ஸல்) அவர்கள் ஏலம் விட்டார்கள். இரண்டு திர்ஹம் கிடைத்தது. அதில் ஒரு திர்ஹத்தைக் கொடுத்து குடும்பத்திற்கு ஏதாவது உணவு வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள். இன்னொரு திர்ஹத்தைக் கொடுத்து கோடாரி வாங்கி வரச் சொன்னார்கள். மலைமேல் ஏறி விறகு வெட்டி அதை விற்றுப் பிழைத்துக் கொள். கையேந்தாதே! என உபதேசம் செய்தார்கள்.

கீழிருக்கும் கையைவிட மேலிருக்கும் கையே சிறந்தது என்ற நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். வாங்கும் கையைவிட கொடுக்கும் கையே சிறந்தது என்பதுதான் அந்த நபிமொழியின் கருத்து.



**கீழிருக்கும் கையைவிட மேலிருக்கும் கையே சிறந்தது என்ற நபி [ஸல்] அவர்கள் சொன்னார்கள். வாங்கும் கையைவிட கொடுக்கும் கையே சிறந்தது என்பதுதான் அந்த நபிமொழியின் கருத்து. [புகாரி, முஸ்லிம்]**


**யார் பிறரிடம் கேட்கும் பழக்கத்தை ஆரம்பித்து விட்டாரோ அவருக்கு பற்றாக்குறைதான் இருக்கும். இப்படியே கையேந்திக் கொண்டே வாழ்க்கை நடத்தினால் அல்லாஹ் அவர் முகத்தில் சதை இல்லாதவராக ஆக்கிவிடுவான். [புகாரி, முஸ்லிம்]**

(புகாரி, முஸ்லிம்)

யார் பிறரிடம் கேட்கும் பழக்கத்தை ஆரம்பித்து விட்டாரோ அவருக்கு பற்றாக்குறைதான் இருக்கும். இப்படியே கையேந்திக் கொண்டே வாழ்க்கை நடத்தினால் அல்லாஹ் அவர் முகத்தில் சதை இல்லாதவராக ஆக்கிவிடுவான். (புகாரி, முஸ்லிம்)

ஒருவர் போதுமான அளவு செல்வம் இருக்கும் நிலையில் மக்களிடம் யாசித்தால் அவர் மறுமையில் தம் முகத்தில் வடு – காயம் உள்ளவராகத்தான் வருவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (திர்மிதி)

இந்த அளவுக்கு யாசிக்கக்கூடாது என்றும் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்றும் இஸ்லாம் கூறுகிறது. நல்ல முறையில் பொருளீட்டுகிற மக்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.


அழகிய நகைகளின்
அதிசய உலகம்
Specialised in Jewelleries,
Diamond & Gemstone
SMS DEEN
SMS DEEN JEWELLERS SDN. BHD.
(231809 - W)
52, Jalan Masjid India, 50100 Kuala Lumpur.
Tel: 03 - 2693 0455, 03- 2693 0599 Fax: 03 - 2691 7728



சித்தீக்

# பெரியோரை மதித்தல் பெருமானாரின் பண்பு!

பெரியவர்களை மதித்து நடப்பதும் பேணிக் காப்பதும் நபி (ஸல்) அவர்கள் கடைப்பிடித்து வந்து கண்ணான பண்பாடாக விளங்கியது. இபாதத்தின் ஒரு பகுதியாகவே அவர்கள் அதனைக் கருதினார்கள். 'அல்லாஹ்வைப் போற்றிப் பெருமைப்படுத்தும் அம்சங்களில் நரைத்த முடிகொண்ட முஸ்லிம்களை மரியாதையோடு நடத்துவதும், திருக்குர்ஆனை பெருமையின்றி மனனம் செய்து ஓதுவதும், அதன் படிப்பினைகளை நிராகரிக்காதிருப்பதும், ஆள்பவரை மதிப்பதும் அடங்கும் என்பது நபிகளாரின் வாக்கு' (அபு தாவூது)

பெரியவர்களை உதாசீனப்படுத்துவோரும் இளையோர்பால் பாசம் காட்டாதவர்களும் முஸ்லிம் சமுகத்திலிருந்தே ஒதுங்குவதற்கு ஒப்பானவர்கள் ஆவர். அத்தகையோர் என் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் ஆகார் என ரசூல் (ஸல்) கூறியிருக்கிறார்கள். (அறிவிப்பு; அஹ்மது, தபரானி)

ஓர் அவையில் வயது முதிர்ந்தவர்களின் கருத்துகளைக் கேட்பதே சிறந்த செயலாகும். இளைஞர்கள் பொறுமை காக்க வேண்டும். நபிகளாரைச் சந்திக்க வந்த ஒரு தூதுக் குழுவில் மிக இளையவராக இருந்த அப்துல் ரஹ்மான் இப்னு சாஹி பேசத்தொடங்கியபோது, நபி அவர்கள் அவரை நோக்கிச் சொன்னார்கள், 'முதலில் உங்களைவிடப் பெரியவர்களைப் பேசவிடுங்கள்' அப்துல் ரஹ்மான் அமைதி காத்தார். (புகாரி மற்றும் முஸ்லிம்)

பெரியவர்களுக்கு மதிப்பளிப்பதில் சஹாபாக்கள் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். அது குறித்து நபிகளார் கூறிய ஓர் உதாரணத்தை அப்துல்லாஹ் பின் உமர் எடுத்துரைத்தார். முஸ்லிமைப் போன்ற ஒரு மரத்தை எடுத்துக் காட்டுங்கள் என இறைத்தூதர் கேட்கிறார்கள். அதாவது ரப்பின் அனுமதியோடு பழங்கள் தருவதாகவும், இலை எதனையும் உதிராததாகவும் இருக்கும் மரம் எது எனக்கேட்கிறார்கள். 'அது பேரீட்சை மரமாகத்தான் இருக்க வேண்டும் என நான் நினைத்தேன், ஆனால், அபுபக்கரும் உமரும் அருகில் இருந்ததால் ஒன்றுமே சொல்லாமல் இருந்தேன்' என்கிறார் அப்துல்லாஹ் பின் உமர். எவரும் ஒன்றுமே பேசாததால், 'அது பேரீட்சை மரம்தான்' என்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள்.

திரும்பி வரும்போது, தமது தந்தையாரிடம் அப்துல்லாஹ் பின் உமர் அதைப்பற்றிச் சொல்கிறார். 'தந்தையே, அது பேரீட்சை மரம்தான் என்பது எனக்குத் தெரியும்'

'அப்படியானால் அதை ஏன் நீ சொல்லவில்லை' என தந்தை உமர் கேட்க, 'தாங்களும் அபுபக்கரும் பேசாமல் இருந்தீர்கள், அதனால்தான் நான் எதுவுமே கூறவில்லை' எனப் பதிலிறுத்தார் அப்துல்லாஹ் (புகாரி & முஸ்லிம்)

இன்னொரு சஹாபாவான அபு சயீத் சமுரா இப்னு ஜுண்தாப் கூறியது. 'நபி அவர்களின் காலத்தில் நான் இளமையாக இருந்தபோது, அவர்களிடமிருந்து ஏராளமான

விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். பெரியவர்கள் அருகில் இருக்கும்போது பேசக்கூடாது என்பது அதில் முக்கியமான ஒரு பாடம்' என்றார். (புகாரி & முஸ்லிம்)

'பெரியவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்க வேண்டும் என்பதும் மூத்தோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதும் இஸ்லாமிய நாகரிகம்' என்கிறார் டாக்டர் முகம்மது அலி அல் ஹஷிமி. ஆனால் இன்று பல முஸ்லிம்கள் தங்கள் பெரியவர்களை மதிப்பது இல்லை என்பது வருத்தத்திற்குரிய உண்மை. இஸ்லாமியப் பாடங்களை அவர்கள் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள் அல்லது அலட்சியப்படுத்துகிறார்கள். ஆகவே, நமது பிள்ளைகளுக்கு இந்தக் கல்வியைப் புகட்ட வேண்டியது முஸ்லிம் பெற்றோரது கடமையாகிறது. பெற்றோர் இக்கடமையில் தவறிழைத்தால் சமூகமும் தவறிவிடும்.

'நேர்மையை இறைவனிடமிருந்து கற்றுக் கொள்ளலாம், மரியாதையைப் பெற்றோரிடம் இருந்துதான் கற்றுக் கொள்ளவேண்டும்' என்பது நபிகளாரின் பொன் மொழி. (புகாரி)

நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் இடையன்தான். உங்கள் பொறுப்பில் ஒரு குழு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனிதர்களும் அப்படித்தான். ஒரு குடும்பத் தலைவனுக்கு ஒரு பொறுப்பு உண்டு. அதைப்போல் ஒரு கூட்டத்துக்குத் தலைவனானவனுக்கு ஒரு பொறுப்பு உண்டு. ஒவ்வொரு பெண்ணுக்கும்கூட தன் கணவரின் குடும்பத்தையும் சொத்துக்களையும் பராமரிக்கும் பொறுப்பு உண்டு. ஓர் அடிமைக்குக்கூட தன் முதலாளியைப் பாதுகாக்கும் பொறுப்பு உண்டு. ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு குழுவுக்குப் பொறுப்பாளிதான் அதாவது ஓர் இடையன்தான்' (புகாரி)



## பேசாமல் இருப்பது குறித்து அண்ணல் நபி (ஸல்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

*"ஒரு நம்பிக்கையாளர் மூன்று நாட்களுக்கு மேலாக தம்முடைய சகோதரரைவிட்டு வைக்கக்கூடாது. அதற்கான அனுமதி அவருக்கில்லை."*

**விளக்கம்:** அதாவது, முஸ்லிம்களின் பரஸ்பரத் தொடர்புகளில் விரிசல்கள் இருக்கவே கூடாது. ஏதோவொரு மனத்தாங்கலின் காரணமாகவோ அல்லது அதிருப்தியின் பொருட்டோ ஒருவர் தம்முடைய முஸ்லிம் சகோதரரிமிருந்து விலகி நிற்கின்றார் எனில், இஸ்லாத்தில் இவ்வாறு உறவுகளைத் துண்டித்துக் கொள்வதற்கு இடமில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எண்ணி மூன்றே நாட்களில் அவர் தமது உறவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். சமரசம் செய்து கொள்ள வேண்டும். இது அவர் மீது கடமையாகும். சொந்த நலன்களைவிட மார்க்க லட்சியங்களுக்கு பன்மடங்கு முக்கியத்துவம் உண்டு. நம்பிக்கையாளர்களிடையே கட்டுக்கோப்பும் கூட்டுறவும் உள்கட்டமைப்பும் வலுப்பெறாத வரை மார்க்க லட்சியங்களை அடையவே முடியாது.

எனவே கட்டுக்கோப்பையும் கூட்டுறவையும் உள்கட்டமைப்பையும் பாதிக்கின்ற, அவற்றுக்கு ஊறு விளைவிக்கின்ற எந்தவொரு செயலிலிருந்தும் முஸ்லிம்கள் விலகி இருக்க வேண்டும். இந்த நபிமொழியின் முக்கியத்துவத்தையும் தாத்பர்யத்தையும் புரிந்துகொள்ள வேண்டுமெனில், குர்ஆனிலும் அண்ணல் நபிகளார் (ஸல்) அவர்களின் அழகிய அறிவுரைகளிலும் வரையப்பட்டுள்ள இஸ்லாமிய வாழ்க்கை முறை பற்றிய கருத்தோட்டம் நம் மனக் கண்முன் இருப்பது அவசியமாகும்.

# சிரிப்பைத் தவழவிடுங்கள்!



'முகத்தில் எப்போதும் மகிழ்ச்சியையும் சிரிப்பையும் தவழவிடுங்கள்' இதுதான் முஸ்லிம் பெண்களுக்கு Lauren Booth விடுத்துள்ள ஆலோசனை. இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஒலிபரப்பாளர், பத்திரிகையாளர், மனித உரிமைப் போராளியான இந்த ஆங்கிலப் பெண், கடந்தாண்டு செப்டம்பரில் இஸ்லாத்தைத் தழுவினார்.

மேற்குலகில் முஸ்லிம் அல்லாதாருடன் கலந்து பழகவும் வெற்றி பெறவும் வேண்டுமானால் இத்தகைய சில பழக்கவழக்கங்கள் அவசியம் தேவை என்கிறார் லாரன். மேற்கில் உங்கள் 'ஹிஜாப்'தான் உங்கள் அடையாளம். வெளியில் கசப்பான முகத்தைக் காட்டினால் உங்கள் கணவரும் தந்தையும் உங்களை கடுமையாக நடத்துகிறார்களோ என்ற சந்தேகத்தைத்தான் ஏற்படுத்தும். அதனாலேயே இஸ்லாத்தைத் தழுவும் என் திட்டத்தைக் கூடச் சற்றுத் தள்ளிப் போட்டேன் என்கிறார் அவர். அதனால் தயவுசெய்து சிரியுங்கள், மலர்ந்த முகத்தோடு காட்சி அளியுங்கள்.

கடந்த மாதம் கோலாலம்பூரில் நடைபெற்ற (25.01.11), 300 பேர் கொண்ட ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில், 'எனது இஸ்லாமியப் பயணம்' என்ற தலைப்பில் பேசும்போதுதான் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். Viva Palestina என்ற அனைத்துலக அரசு சார்பற்ற இயக்கத்தின் ஏற்பாட்டில் லாரன் மலேசியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஆன்மிக உருக்கத்தோடு அவர் ஆற்றிய உரையில் இஸ்லாத்துக்குத் தாம் மாறிய அனுபவங்களையும் விளக்கினார். லண்டனில் மிக இளமையாக இருந்தபோதே இஸ்லாத்தின்பால் தமக்கு ஏற்பட்டுவிட்ட ஈடுபாட்டையும் தத்துவார்த்தப் பயணத்தையும் அவர் விவரித்தார்.

7 வயதிலேயே தமது இரு கைகளையும் கோர்த்துக்கொண்டு, பக்தியோடு இறைவனை நோக்கிப் பேசியதை அவர் நினைவு கூர்ந்தார். சமயப்பற்றற்ற குடும்பத்தில் வளர்ந்த எனக்கு இதுகுறித்து யாரும் சொல்லித் தரவில்லை என்றார் லாரன் பூத். ஆனாலும் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தாம் காஸாவுக்குச் செல்லும் வரை இஸ்லாத்தைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை என ஒப்புக்கொள்ளும் அவர், அங்குதான் முஸ்லிம்களின் சக்தியை எதிர்நோக்கினேன் என்கிறார்.

'அதுவரை உலக வரைபடத்தில் வன்முறைக் கும்பலாக சாயம் பூசி வரு ணிக்கப்பட்ட முஸ்லிம்கள் எவ்வளவு ஆ க் க க ர மானவர்கள் என்பதை அங்கேதான் உணர்ந்தேன்'.


அன்றிலிருந்துதான் மத்தியகிழக்கு விவகாரத்தில் வெளிப்படையாகப் பேசும் ஒரு வருணனையாளர் ஆனேன் எனக்கூறும் அவர், எனது அந்தப் பேச்சும் ஒலிபரப்பும் பெரும்பாலும் மேற்குலகைச் சாடுவதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர் உள்ளிட்ட தலைவர்களின் உண்மையான சாயத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்தன.

அதற்கு முன்னர் கடந்தாண்டு, தாம் இஸ்லாத்தைத் தழுவுவதற்குக் காரணமாக அமைந்த இரானின் ஃபாத்திமா மஃசூமே பள்ளிக்குப் புரிந்த வருகையையும் பாலஸ்தீனத்தில் அல் அக்ஸா பள்ளிவாசல் காப்பாளர் Sheik Raed Salahவுடன் (கோபன்ஹேகனில் நடைபெற்ற ஒரு மாநாட்டின்போது) நடத்திய பேட்டியையும் பற்றி அவர் விளக்கினார்.

அந்தப் பேட்டியின்போது திடீரென எனக்கு ஓர் உணர்ச்சி கிளர்ந்தெழுந்தது. ஆனால், அது என்னவென்று புரியவில்லை என்றார் பூத். அப்போதே 'நான் ஒரு முஸ்லிம்தான்' என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. என்றாலும், பிரபலமாக இருக்கும் ஒரு மேற்கத்தியப் பெண்ணான நான் ஒரு முஸ்லிம் என்ற உணர்வு எழுந்தபோது தொடக்கத்தில் ஒருவித அச்சம் தலைகாட்டவே செய்தது. காஸாவுக்குச் சென்ற என்னை லண்டன் திரும்பவிடாமல் தடுத்தார்கள் இஸ்ரேலிய அதிகாரிகள். அதேசமயத்தில் எனது முன்னாள் கணவர் ஒரு கார் விபத்துக்கு இலக்காகி சுய உணர்வின்றிக் கிடந்தார். அத்தகைய சூழ்நிலையில் நான் கேட்ட செய்திகள் எல்லாமே இஸ்லாத்தைப் பற்றித்தான்.

அச்சம் நீங்கியது. அறிவு தெளிந்தது. இப்போது மிகத் தெளிவாக இருக்கிறேன் என்கிறார் பூத். தற்போது இவர் இரானுக்குச் சொந்தமான தொலைக்காட்சி நிலையமொன்றில் 'இஸ்லாமிய அலைவரிசை'யில் பணிபுரிகிறார்.

– நூருல் ஈமான்



கதீஜா மணாளன்

# ரமதான் அல்லாத நோன்புகள் ஒரு பார்வை!



இறைவழிபாட்டின் மிக முக்கியமான அம்சம் நோன்பு ஆகும். நோன்பு நோற்கும் மனிதர் அல்லாஹ்வின் உண்மையான அடியாராகக் கருதப்படுவார். அதிலும் 'அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கும் ஒவ்வொரு மனிதனையும் இறைவன் நரக நெருப்பிலிருந்து, 70 ஆண்டுத் தொலைதூரத்தில் கொண்டு போய் நிறுத்துவான்' என்பது நபி (சல்) அவர்களின் பொன்மொழியாகும்.

ரமதான் திங்கள் முழுவதும் நோன்பு நோற்க வேண்டியது கட்டாயம் என விதிக்கப்பட்டாலும், இஸ்லாமிய நாள்காட்டியின் மற்ற மாதங்களில் நோன்பு நோற்க வேண்டும் என்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மிக வலுவாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தெந்த மாதங்களில் மிகவும் கண்டிப்பாக நோன்பு வைத்தார்கள் என்பதைச் சற்றுக் காண்போம்.

### ரஜப் மாதம்

ரஜப் மாதம் என்பது இஸ்லாமிய நாள்காட்டியில் மிக முக்கியமான ஒரு மாதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் அல்லாஹ் போர்களைத் தவிர்க்கச் சொல்லியிருக்கிறான். ரமதானுக்கு முந்திய மாதம் என்பதாலும் அதனைத் தொடர்ந்து ஷஃபான் குறுக்கே வருவதாலும் இந்த ரெஜப்பில் சண்டை கூடாது என ஆணைபிறப்பித்துள்ளான் அல்லாஹ். அத்துடன் நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து புறப்பட்டு ஜெருசலம் சென்று, விண்ணுலகப் பயணம் மேற்கொண்டு சொர்க்கத்துக்கு (மிஃராஜ்)ச் சென்று வந்ததும் இந்த மாதத்தில்தான்.

ரஜப் திங்களைக் கண்ட மாத்திரத்தில் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதிய துஆ இதுதான். 'யா அல்லாஹ், இந்த ரஜப்பையும் ஷஅபானையும் அருள் தரும் மாதங்களாக்கி வைப்பாயாக! ஏனெனில் அவற்றைத் தொடர்ந்து ரமதான் வருகிறது'.

இந்த மாதத்தில் ஒரு நாளைக்கு நோன்பு நோற்கும் ஒவ்வொரு மனிதரின் பாவங்களையும் மன்னித்து அருள்வதோடு அவருக்கு நரகக் கதவுகளையும் இறைவன் மூடிவிடுகிறான் என்கிறார்கள் நபிகளார் (ஸல்) அவர்கள்.

### ஷஅபான் மாதம்

ஷஅபான் என்பது ரமதானுக்கான ஆயத்த மாதமாகும். அந்த மாதத்தில்தான் வேறு எந்த

மாதத்தையும்விட மிக அதிகமான நோன்புகளை நோற்று ஒத்திகை செய்து கொள்வார்களாம் நமது ரசூல் (ஸல்). அதனால் ஒவ்வொரு முஸ்லிமும் இந்த ஷ:பான் மாதத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நோன்புகளை நோற்றுக் கொள்ளுங்கள் என அறிவுறுத்தப்படுகிறது.

### ஷவ்வால் மாதம்

ரமதானில் நோன்பிருந்துவிட்டு அதற்கடுத்த மாதமான ஷவ்வாலிலும் ஆறு நோன்பு நோற்பவர் எவரோ அவர் நிரந்தரமாக நோன்பு நோற்றவர் ஆகிறார் என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

### அர:பா நாள் (துஅல் ஹிஜ்ஜா 9ம் நாள்)

நம்பகமான ஹதீஸ் இது. அர:பா தினமான அதாவது ஹுக்கு:ப்புக்கு முதல் நாளான துல்ஹஜ் மாத 9ம் நாளன்று நோன்பிருப்பது அதற்கு முந்திய பிந்திய சிறு பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன.

### முஹர்ரம் மாத நோன்பு

இஸ்லாமிய நாள்காட்டியின் முதல் மாதம் முஹர்ரம். அந்த மாதத்தையே நோன்புடன் தொடங்குவது ஒரு புண்ணியச் செயலாகும். இறைவனுக்காக நோன்பிருந்து அவனுடைய அருளையும் ஆதரவையும் மௌனமாகக் கோருவதன் அடையாளம் அது.

அந்த மாதத்திய நோன்பும் இரவு நேரத் தொழுகையும் ரமதானுக்கு அடுத்த மிக முக்கியத்துவம் வாய்ந்த அமலாகும் என நபிகளார் மொழிந்துள்ளார்கள்.

### அஷூரா தின(முஹர்ரம் 10ம் நாள்)நோன்பு


இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்து சேர்ந்த அன்றைய தினம் அஷூராவை முன்னிட்டு யூதர்கள் நோன்பு நோற்றுக் கொண்டிருந்ததைக் கண்டதாக இப்னு அப்பாஸ் அறிவிக்கிறார். 'இன்று நீங்கள் நோன்பிருப்பதன் காரணமும் முக்கியத்துவமும் யாது' என நபியவர்கள் கேட்க, அவர்கள் சொன்ன பதில் இது. 'மிக முக்கியத்துவம் வாய்ந்த நாள் இது, இன்றுதான் இறைவன் மூசாவையும் அவரைப் பின்பற்றிய கூட்டத்தாரையும் கடைத்தேறச் செய்ததோடு :பிர்அவுனையும் அவனது கும்பலையும் வெள்ளத்தில் மூழ்கடித்தான். இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மூசா நோன்பிருந்த நாள் இன்று. அதனால்தான் நாங்களும் இன்று நோன்பிருக்கிறோம்' இந்த பதிலைச் செவியேற்ற இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'இந்த நந்நாளுடன் உங்களைவிட எங்களுக்கு மேலும் அதிகத் தொடர்பு உள்ளது' எனக்கூறி, அஷூரா நாளில் நோன்பைக் கடைப்பிடிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். (முஸ்லிம்)

இந்த ஹதீசின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை தவிர்த்த மற்ற எல்லா நாட்களிலும் நோன்பிருப்பது இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் அடையாளமாக அமைகிறது. இறைவன் நமக்கு அள்ளித்தரும் கொடைகளுக்கு ஓர் அளவே கிடையாது. வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் அவனுக்கு நன்றி செலுத்திக்கொண்டே இருந்தாலும் நம் கடமை தீராது அல்லவா?

அதற்கும் மேலாக கடந்த காலங்களில் பல பாவங்களைவேறு செய்திருக்கிறோம். அதற்கு மன்னிப்புக் கோரவும் எதிர்காலத்தில் பாவங்கள் செய்யாதவாறு காக்கவும் இந்த நாளில் நோன்பு நோற்பது கடமையாகிறது.

### திங்கள் –வியாழக்கிழமைகளில்

திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் மனிதர்கள் இயல்பாகவே அல்லாஹ்வின் சன்னதியில் பிரசன்னமாகிறார்கள். அவ்விரு நாள்களிலும் இறைத்தூதர் அவர்கள் நோன்பிருந்து அல்லாஹ்விடம் தமது செயல்களின் மதிப்பீடுகளைப் பெறுவது வழக்கமாக இருந்து வந்தது. ஏன் திங்கட்கிழமை எனக்கேட்டபோது, அது நான் பிறந்த கிழமை என்பதோடு நபித்துவம் தரப்பட்ட கிழமையும் அதுதான் என நபிகளார் பதில் இறுத்தார்கள்.(முஸ்லிம்) அது மட்டுமின்றி நபியவர்கள் இம்மையை விட்டுப் பிரிந்து இறைவனை நோக்கி மறுமைக்கு ஏகியதும் ஒரு திங்கட்கிழமைதான்.



# BM MONEY CHANGERS



**Haji Mohd. Suibu Bin Md. Yusoof,** Dip. Mgt. Pr.
Managing Director

No. 25, Jalan Bukit Bintang, 50100 Kuala Lumpur.
***Tel : 03 2145 5777***



# AJENSI PERKAPALAN INSAN SDN. BHD.

Api
Est 1986

(667579-K)

Specialist in Freight Forwarding, Shipping, Packing, Transportation, Warehousing

45-A, Jalan Tengku Badar, P.O.Box: 14,
42000 Pelabuhan Klang, Selangor Darul Ehsan.
Tel: +603 3168 5163, 3167 8697, 3166 8016 Fax: +603 3167 4215
Email: bachamy@pc.jaringmy, bacha@insan.com.my Website:www.insan.com.my



# RESTORAN AL-ESFAN

**KELAZATAN SAJIAN KEBANGGAAN KAMI**





***We also cater for special occasions. Fax: 03 2283 4360 or 03 6186 8105***

No: 27 G, The Boulevard, Blok Pejabat Signature, Mid Valley City, Lingkaran Syed Putra, 59200 KL.
Hp: 012 5557258

Lot G027D & G027E,
Ground Floor, Plaza Berjaya, No: 12,
Jalan Imbi, 55100 Kuala Lumpur
Hp: 012 555 7284

No: 137, Block P, Jalan Satu, Batu Caves Centrepoint,
68100 Batu Caves,Selangor
Hp: 012 555 7281

No: 12, Blok 3, Jalan Jati Satu, Taman Goh Tong Jaya,
69000 Genting Highland, Pahang.
Hp: 012 555 7264

No: 19, Jalan SBC 2, Taman Sri Batu Caves
68100 Batu Caves, Selangor.
Hp: 012 555 7065

No: 61 & 63- LG2, Blok D, Jaya One,
Jalan 13/6, Sek 13, Petaling Jaya, Selangor.
Hp: 012 555 7243

Stall No: 6, Food Junction, 3rd Floor
Mid Valley Mega Mall.

## Al-Esfan Briyani House

No. 23-G, Palma Square, Blk D, Jaya One,
Sek 13, Petaling Jaya. Selangor
Hp: 012 555 7243

## Pasar Mini Al Esfan Mart

No: 140, Jalan SBC 3, Taman Sri Batu Caves.
Hp: 012 555 7064.

### ஒரு நாள்விட்டு மறுநாள்

ஒருநாள்விட்டு ஒருநாளாக தாங்கள் நோன்பு நோற்றதன் காரணம் என்ன என்று நபிளாரிடம் கேட்டபோது, 'என் சகோதரர் தாவூது அப்படிச் செய்ததே காரணம்' எனப் பதில் கூறியதோடு இன்னொரு ஹதீசையும் வெளிப்படுத்தினார்கள். 'தாவூது, அல்லாஹ்வின் கண்களில் தென்பட்டுக் கொண்டே இருக்க எண்ணி தமது ஆயுளில் பாதியை (ஒரு நாள்விட்டு ஒருநாள்) நோன்பிலேயே கழித்தார். அத்துடன் ஈடு இணை அற்ற இறைவனின் பேருவகையை அனுபவிக்கும் நோக்கத்தோடு இரவு நேரங்களில் எல்லாம் அல்லாஹ்வை வணங்கியவாறே காலத்தைக் கழித்தார்' என்றார்கள். இரவு நேரத்(தஹஜ்ஜுத்)தொழுகைக்கு எவ்வளவு மகிமை உண்டு என்பதை இந்த ஹதீஸ் விளக்கும்.

### மாதந்தோறும் மூன்றுநாள் நோன்பு

இறைத்தூதர் அவர்கள் நாட்களைப் பற்றிக் கவலைப் படாமல் மாதம் தோறும் மூன்று நோன்பு கடைப்பிடித்து வந்தார்கள். மாதம் 3நோன்பும் ரமதான் நோன்பும் முடிவில்லா நோன்புக்கு அடையாளம் என நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள் (முஸ்லீம்). நோன்பு என்பது இம்மையில் நமது ஆரோக்கியத்துக்கான முதலீடு மட்டுமின்றி, இறப்புக்குப் பிறகு புதிதாக நன்மைகள் ஏதாவது செய்ய வேண்டும் என்ற தேவையையும் அகற்றிவிடுகிறது என்பது நபி மொழி. அத்துடன் உங்களை எதிர்நோக்கும் ஏழுவிதப் பேரிடர்களிலிருந்து(உங்கள் அறிவை இழக்கச்செய்யும் வறுமை, தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் வளம், உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் நோய்கள், சிந்தனையைக் குலைக்கும் முதுமை, திடீர் மரணம், மிக மிகக் கசப்பான தஜ்ஜால் அல்லது இறுதிநாள் துன்பம்) உங்களைக் காக்கும் கவசமாகவும் இந்த நோன்பு திகழ்கிறது. (திர்மீதி).

அல்லாஹ்வுக்கு அடிபணியும் உண்மையான அடையாளம் நோன்பு. அத்துடன் (பல்லிறைக் கொள்கை உள்ளிட்ட) எந்தவித ஷிர்க்கிலிருந்தும் உங்களைக் காப்பதும் இந்த நோன்பும் அதையொட்டிய தொழுகையும்தான். இந்த முதலீடுகள்தான் அல்லாஹ் விதிக்கும் நல்விளைச்சலை நமக்கு அள்ளித்தரும் இலாபங்கள்.

# அரிசி விஞ்ஞானி டாக்டர் சித்தீக்கிற்கு பத்மஸ்ரீ விருது!



அரிசி ஆராய்ச்சியில் உலக அளவில் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் சித்தீக் இந்த ஆண்டின் பத்மஸ்ரீ விருதுக்கு இந்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். டாக்டர் சித்தீக் தற்போது ஹைதராபாத்தில் வசித்து வருகிறார். கௌரவத்திற்கு ஒரு ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டு இன்றளவும் விஞ்ஞானியாக பணியாற்றி வரும் அவரைப் பற்றிய நேர்காணலை சில ஆண்டுகளுக்கு முன்பு நம்பிக்கையில் வெளியிட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

குடியரசு தினவிழாவை முன்னிட்டு டாக்டர் இ.ஏ. சித்தீக் அவர்கள் அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் சிறப்பாக பணியாற்றிதற்காதக பத்மஸ்ரீ விருத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட அரிசிகள் இந்திய நாட்டிற்கு அதிகமான அன்னியச் செலாவணியைப் பெற்று தந்துள்ளது. பாஸ்மதி அரிசிக்கான பேடண்டை அமெரிக்காவிடமிருந்து மீட்ட பெருமையும் அவருக்கு உண்டு. இராமநாதபுதம் மாவட்டம் இளையான்குடியில் பிறந்த டாக்டர் சித்தீக் சிறப்பாக தேர்ச்சி பெறும் தனதூரைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓர் அறக்கட்டளை நிறுவி பரிசுத் தொகைகளை வழங்கி கௌரவித்து வருகிறார். அவரது துணைவி ஃபாத்திமுத்து சித்தீக் முஸ்லிம் ஏடுகளின் பிரபலமான எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.





டாக்டர் ஹிமானா சையத்,
சிங்கப்பூர்.

# மறக்க முடியாத சிசேரியன்!

பினாங்கு நகரத்தில் ஈமான் பேரவை நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் விருந்து நிகழ்ச்சி.

அப்போது ஓர் இளைஞர் ஸலாம் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார். அவர் எனது சொந்த ஊரைச் சேர்ந்தவர்; உறவினர். அவரை எதிர்பாராமல் பார்த்ததும் மனக் கண்ணில் பழைய நினைவுகள் வேகமாக ஓடின.

1973 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி அல்லது 1974 ஆம் ஆண்டின் கடைசியாக இருக்கலாம். அடைமழை காலம். வைகறையின் வெள்ளப் பெருக்கில் சாலைகள் பழுதடைந்திருந்தன. மின்சாரத் தடையில் ஊர் இருளில் மூழ்கியிருந்தது.

நடுநிசியில் ஓர் அழைப்பு. பிரசவ கேஸ். டார்ச் லைட் உதவியுடன் நோயாளியின் இல்லத்துக்குச் சென்று சோதித்தேன். குழந்தை தாறுமாறாகக் கிடந்தது. ஏற்கனவே, நீர்க்குடம் உடைந்திருந்தது. உடனடியாக குழந்தை பிறக்காவிட்டால் குழந்தைக்கும் தாய்க்கும் ஆபத்து என்ற நெருக்கடி நிலைமை. விரைவில் சுகப் பிரசவமாவதற்கான வாய்ப்பு இல்லை. நிலைமையின் நெருக்கடியில் உடனடியாக பேஷிண்டை இராமனாதபுரத்துக்குக் கொண்டு சென்று சிசேரியன் செய்தாக வேண்டும்.

ஊரில் ஒரேயொரு டாக்சி. போன் எல்லாம் அப்போது கிராமத்தில் இல்லை. உறவினர்களிடம் நிலைமையின் அவசரத்தை விளக்கிச் சம்மதம் பெற்று டாக்சிக்கு ஆள் அனுப்பினேன்.

நல்ல நேரம். டாக்சி வெளியில் செல்லாமல் இருந்தது. அரை மணி நேரத்தில் டாக்சியைக் கொண்டு வந்து அடுத்து ஒரு மணி நேரத்தில் செய்யதம்மாள் மருத்துவமனையில் அட்மிட் செய்தேன். டாக்டர் அப்துல்லாஹ் வேறொரு அவசர நோயாளிக்காக மருத்துவமனையில் இருந்தார்.

“உடனடியாக சிஸேரியன் செய்தாகனும்பா... குழந்தை ஆபத்தான நிலையில் இருக்கிறது... ரொம்ப நேரம் தாங்காது...” என்றேன். “என்னோட அசிஸ்டன்ட் டாக்டர் இன்றைக்கு லீவ் போட்டுவிட்டு வெளியூர் சென்றிருக்கிறார். ஆப்பரேஷன் செய்ய நான் ரெடி... ஆனால் அனெஸ்தீசியா (மயக்க மருந்து) கொடுக்க டாக்டர் இல்லை. நீ அதற்கு ஒப்புக் கொண்டால் உடனடியாகச் செய்யலாம். ரிஸ்க் எடுத்துத்தான் செய்யனும்... ஆனால் செய்யாவிட்டால் தாய்க்கும் குழந்தைக்கும் உத்தரவாதமில்லை...” என்றார் டாக்டர்.

யோசிக்கவோ கருத்து பரிமாறிக் கொள்ளவோ நேரமில்லை.

மயக்க மருந்து கொடுக்க 'பாயில் அப்பரட்டஸ்' அப்போது இராமநாதபுரத்தை எட்டியிருக்கவில்லை. ஈத்தர் என்ற மருந்தைத்தான் உபயோகிக்க வேண்டும். ஒரு 'காஸ்துணி' பேடை நோயாளியின் முகத்தில் போர்த்தி கொஞ்சம் கொஞ்சமாக ஈத்தரை ஊற்ற வேண்டும். சில நிமிடங்களுக்கொருமுறை நோயாளியின் முச்சு – நாடித் துடிப்பு – இதய இயக்கம் போன்றவற்றைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டு நான் மயக்க மருந்து கொடுக்க, டாக்டர் அப்துல்லாஹ் சுறுசுறுப்பாக இயங்கி அரை மணி நேரத்தில் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுத்தார்.

குழந்தை உடனே அழவில்லை. பிரசவப் பாதையின் கடைசிப் பகுதியில் மாட்டிக் கொண்டு அதிக நேரம் இருந்ததால் குழந்தை உடனே சுவாசத்தைத் தொடங்கவில்லை..

மயக்க மருந்தைக் கண்காணித்துக் கொண்டே, அடுத்த சில நிமிடங்கள் நானும் ஸ்டாஃப் நர்சும் இணைந்து போராடி, குழந்தையை நார்மல் நிலைக்குக் கொண்டு வர, டாக்டர் ஆப்பரேஷன் செய்த பகுதியைத் தைத்து முடித்தார்.

குழந்தை நார்மலாக சுவாசிக்கத் தொடங்கியதும், தாய் மெல்ல மெல்ல இயல்புக்குத் திரும்பியதும் எங்களுக்குப் பெரும் நிம்மதியைத் தந்தது.


அப்படியான, ஒரு அவசர சிகிச்சையில் – மிக நெருக்கடியான சூழ்நிலையில் பிறந்த குழந்தைதான் பினாங்கில் சந்தித்த முஹம்மது இப்ராஹீம் என்ற இளைஞர்.


இப்படித்தான் கிராமிய மருத்துவ தொழில்முறையில் – நவீன மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் கிராப்புறங்களை எட்டாத அந்தக் காலத்தில் எத்தனை எத்தனை நெருக்கடிகளை, சவால்களைச் சந்தித்த அனுபவங்கள்.

உயிருக்கு அபாயமேற்படுத்தாதும் பாம்பு கடிகள், திருக்கை மீன் குத்தல்கள், மாரடைப்புகள், பக்கவாதங்கள் என்று எத்தனையெத்தனை அவசர கேஸ்களுக்கு சிகிச்சையளித்ததும், முதலுதவி செய்து பாதுகாப்பாக நகர்ப்புற மருத்துவ மனைகளுக்கு மேற்சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததுமான அனுபவங்களும்!

ஊற்றெடுத்துப் பாயும் அந்த எண்ணவோட்டங்கள்தான் எத்தனை அலாதியான மனநிறைவினைத் தருகின்றன! அல்ஹம்துலில்லாஹ்!

இன்று கடல்கடந்து வெளிநாட்டில் வாழ்ந்தாலும் மறக்க முடியாத அந்த 33 ஆண்டுக்கால தொழில் வாழ்க்கையும் – அதனை மையப் புள்ளியாக வைத்துச் செயல்பட்ட களப்பணி ஊழியமும்தான் பிராணவாயு போல ஆசுவாசம் தந்து கொண்டிருக்கிறது. நகரும் ஒவ்வொரு விநாடியும் அந்த என் மண் வாசனையின் நிறைவைத்தான் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.







# Beautify Your Costumes With Our Exclusive Costume Jewellery

## NEW MALLIGA ENTERPRISE SDN. BHD. (378843-W)

*Kuala Lumpur Branch:*
1001 Selangor Mansion, Jalan Masjid India,
50100 Kuala Lumpur, Wilayah Persekutuan, Malaysia.
Tel: 603 2693 2317, 014 6666 694, Fax: 03 2694 9644

*Brickfields Branch:*
256 & 258, 258A, Jalan Tun Sanbanthan,
Brickfields, 50470 Kuala Lumpur.Tel: 03-22730204,
0166 201 1114, Fax: 03 2274 0100

*Jalan Ipoh Branch:*
349, Ground Floor, Jalan Ipoh, Batu 2 ½,
51200 Kuala Lumpur.
Tel: 603 4044 0100 Fax: 603 4044 4100

*Klang Branch:*
10, Jalan Dato Yusof Shahbudin 30,Taman Sentosa,
41200 Klang, Selangor Darul Ehsan.
Tel: 603 5161 0100 / 016 289 9900

பாவலர்திலகம் டாக்டர் பட்டர்வொர்த்
எஸ். எம். ஜைனுத்தீன்

# அந்தப் பெயர்..!

அகம தென்னும் அண்ணல் நாமம் எங்கும் எங்கும்
அந்தப் பேரில் அன்பும் பண்பும் தங்கும் தங்கும்

முகம தென்னும் தூதர் நாமம் வாழ்க வாழ்க
முன்னோர் அல்லாஹ் சாந்தி இன்பம் சூழ்க சூழ்க!

மோனத் தென்றல் பேரைச் சொல்ல முந்திக் கொள்ளும்
மோகம் கொண்டு தூதர் பெயரை நெஞ்சம் அள்ளும்

சீன தேச கல்வி ஏட்டில் மின்னும் மின்னும்
சீலம் உள்ள சிறப்பு வந்து துள்ளும் துள்ளும்

வானம் பாடி வள்ளல் நாமம் பாடிச் செல்லும்
வல்லோன் தூதர் வாஞ்சை பண்பைச் சொல்லும் சொல்லும்

ஆழக் கடலும் அந்தப் பெயரை அலையில் ஓதும்
அகத்துக் குள்ளே இன்பம் பொங்கி மோதும் மோதும்

வாழ வைக்கும் வைர மொழிகள் வளத்தைக் காட்டும்
வைய கத்தில் இக்பால் கவிஞர் வனப்பை ஊட்டும்!

காலைக் கதிரோன் காதல் கொண்டு ஒளியை வீசும்
காவி யத்தில் பூமான் தூதை காதில் பேசும்

சோலைக் குள்ளே ரோஜா மலரும் சொக்கிப் போகும்
சோதி பொழியும் வானம் எங்கும் சொந்த மாகும்!

பாலை வனத்து மக்கா நகரம் என்றும் வெல்லும்
பாச முள்ள மதினா வந்து பாடம் சொல்லும்

மாலை நேரம் மதி, நா இரண்டும் அறிவைக் கூட்டும்
மாத வத்தில் சீமான் பெயரால் கங்குல் ஓட்டும்!

*(ஜவாபே சிக்வாவில் அல்லாமா இக்பால் இறைத்தூதரின் இனிய பெயர் பற்றி அல்லாஹ் கூறுவதாகப் பாடுகிறார்...)*



சுஹானா

# இஸ்லாத்தில் பெண்களின் தலைமைத்துவம்!

இஸ்லாத்தில் பெண்களின் நிலைமை என்ன என்பது பற்றி இன்று நேற்றல்ல காலம் காலமாகவே பேசிக் கொண்டும் விவாதித்துக் கொண்டும் தான் இருக்கிறார்கள். விவாதம் செய்யும் மனிதர்களைப் பொறுத்தும் சூழ்நிலையைப் பொறுத்தும் ஏதாவதொரு முடிவுக்கு வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இது குறித்து நாமும் ஆராய்வோமே.

இப்னு பத்துதாவைப் (1304 –1369) பற்றி நமக்குத் தெரியும். மொரோக்கோவைச் சேர்ந்த கல்விமானான அவர் 30 ஆண்டுக்காலம் உலகைச் சுற்றிப் பயணம் செய்து கொண்டே இருந்தவர். மார்க்கோபோலோ போன்ற அவருடைய சமகாலப் பிரயாணிகளையும் முன்னோடிகளையும்விட அதிகமான தொலைவுகளுக்கெல்லாம் சென்றவர் இவர்.

அவர் தமது வாழ்க்கைக் குறிப்பில் Zaynab Binti al Kamal என்ற தமது ஆசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சிரியாவின் டமாஸ் கசிலிருந்து கொண்டு மிகப் புகழ்பெற்ற நூல்களை அவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். அவற்றில் *Sahih al Bukhari, Muslim, Muwatta* ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கவை. முஹம்மது நபிகளின் ஹதீஸ்கள் தொடர்பான மிகவும் நம்பிக்கைக்குரிய தொகுப்புகள் இவை எனலாம். அவர் வாழ்ந்த காலமானது மேற்கத்தியப் பெண்கள் இன்னமும் படிப்பு வாசனையே இல்லாதிருந்த காலம். அதனால் பள்ளிக்கூடத்துக்கு அவர்கள் சென்றார்களா என்ற கேள்விக்கு இடமே இல்லை.

இப்னு பத்துதா தமது இன்னொரு குறிப்பில் Razia Sultanனைப் பற்றியும் குறிப்பிட் டுள்ளார். 13ம் நூற்றாண்டில் டில்லி சுல்தானா வாக இருந்தவர் அவர். இஸ்லாமிய அரசாட்சி வரலாற்றில் 5வது ஆட்சியாளராக அரியணை ஏறிய ரசியாதான் இந்தியாவிலேயே முதல் பெண்ணரசியாவார். இஸ்லாத்தின் மற்ற எந்தப் பகுதியையும்விட இஸ்லாமிய உணர்வுதான் முக்கியமானது என வலியுறுத்திய அந்த அரசி தான், தமது ஆட்சியில் திருக்குர்ஆனையும் நபிகளின் ஹதீஸ்களையும் பழம்பெரும் தத்துவ ஞானிகளையும் நினைவுக்குக் கொண்டுவரும் வகையில் ஏராளமான பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் ஆய்வு நிலையங் களையும் பொது நூலகங்களையும் நிறுவினார்.

வரலாற்றில் இடம்பெற்ற புகழ்பெற்ற முஸ்லிம் பெண்களின் பட்டியல் மிக நீளமானது. அத்தகைய முஸ்லிம் மகளிர் தலைவர்கள் பட்டிய லில் எகிப்திய சுல்தானா Shajar al-Durrரும் ஒருவராவார். 7வது சிலுவைப் போரில் வென்று, 9ம் லூயி மன்னனையும் அந்த சமயத்தில் பொறாமை காரணமாக அப்பாசிய ஆட்சியை நடத்தி வந்த Shaghabபையும் சிறை செய்தவர் இந்த அரசிதான். அந்த வரிசையில் Rabiah Binti Mu'awwad என்ற மாபெரும் ஃபிக்ஹ் அறிஞரும் ஒருவர். மதீனாவின் பெரிய பெரிய சான்றோருக்கெல்லாம் ஃபிக்ஹ் தொடர்பாக போதனை செய்தவர் அவர்.

### பங்களிப்புதான் – தனியுரிமை அல்ல

இன்று எடுத்ததற்கெல்லாம் பெண்களின் பங்கு என்ன, அவர்களுக்குரிய உரிமை யாது, சலுகை எங்கே, அதிகாரம் இல்லையே என சதா நச்சரிப்பு தொடர்ந்து

கொண்டிருக்கிறது. கடந்த பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் பெண்களின் பங்கு எத்தகையது என்பது வரையறுத்துத் தரப்பட்டே வந்துள்ளது. ஒரு தாயாக, மனைவியாக, சகோதரியாக அவர்களுடைய பங்களிப்பு என்ன என்பதை மிகச் சரியான முறையில் வரையறுத்து, ஒழுங்கு படுத்தியிருக்கிறது இஸ்லாம்.

ஒருவேளை இதற்காக வகுக்கப்பட்ட பாதையை அடியோடு மாற்றியமைக்க வேண்டுமோ என்னவோ. முதலில் பெண்களை 'பெண்கள்' என்ற ஒரு கட்டமைப்புக்குள் போட்டு விவாதிக்க வேண்டும். அந்த உயிருக்கு இருக்கின்ற வேறு எல்லாவித உறவுகளையும் கடப்பாடுகளையும் மறந்துவிட்டு இறைவனின் படைப்பு என்ற ரீதியில் இறைவனுக்கும் அந்தப் பெண் ணுக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பற்றி மட்டும் விவாதிக்க வேண்டும். அப்படிச் செய்வது உலகின் 50 விழுக்காட்டு மனிதத் தரப்பின் உண்மையான நிலையை உணரவும் உணர்த்தவு மான ஓர் அவசரமான கடமையாகும்.

**கிங் மேக்கர்ஸ் (மன்னர்களையே உருவாக்குவோர்)**

இன்றைய உலகில் பெரும்பாலான ஆட்சி யாளர்களை உருவாக்கும் உபாயம் பெண்களுக்கே உண்டு. பெயரளவுக்கு அல்லது சட்ட முறைப்படி மட்டுமே அரசராக அல்லது அதிபராக அல்லது பிரதமராக உள்ள ஆண்களின் பின்னணியில் உள்ளவர்கள் பெண்களாகவே (அவர்கள் மனைவியாக இருக்கலாம் அல்லது தாயாக, அல்லது மகளாக அல்லது மருமகளாகக்கூட) இருப்பதை நாம் உணரலாம். மறைமுகமாக ஆட்சியைச் செலுத்தும் 'சுக்கா'னாகத் திகழ்வோர் பெண்கள்தான். அதுவும் இன்று நேற்று அல்ல.

**திருமறை கூறும் ஆளுமை மிக்க பெண்கள்**


திருமறையிலேயே ஆளுமைமிக்க நபர்களாகப் பெண்களை வருணித்திருப் பதைக் காண முடிகிறது. பில்க்கீஸ் (Bilqis) எனப்படும் ஷேபா ராணி (Queen Of Sheba) அதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். மூசா (அலை)வின் தாயாரான அவர் இறை ஆணையை ஏற்று மகனை அர்ப்பணிக்கிறார். Pharoahவின் மனைவி ஆஷியா. கணவரின் கொடுமையான ஆட்சிக்கு எதிராக இறைவனிடம் பாதுகாப்புக் கோரி மன்றாடுகிறார். பிறக்காத தன் மகனை இறைச் சேவைக்காக சமர்பிக்கிறார் மரியம். சூரத்துல் மரியம் என்ற அத்தியாயமே ஈசா (அலை) அவர்களின் வரலாற் றைப் பறைசாற்றுகிறது.

'அறிவைத் தேடி அலைய வேண்டியது முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரு கட்டாயக் கடமை' என மொழிந்தார்கள் முஹம்மது நபி (சல்) அவர்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத் தமது போர்க்களங்களிலும், வாணிகச் சந்தைகளிலும், அறிவுத் தேட்டத்திலும் மற்ற எல்லாவகைப் பணிகளிலும் ஆண்களும் பெண்களும் சரிநிகர்ச் சமமாக இணைந்து பாடுபடுங்கள் என வலியுறுத்திக் கொண்டே இருப்பார்கள். அவர்களின் மனைவி கதீஜா பிந்தி குவைலிதே ஒரு வெற்றிகரமான வணிகர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எல்லாச் சமூகங்களிலும் இன்றைய நிலை மையும் இதுதான். அமெரிக்கா தொடங்கி, எகிப்து, மலேசியா வரை பெண்களின் வளர்ச்சி என்பது விகிதாச்சார ரீதியில் அல்ல, அவரவர் திறமைக்கும் ஆற்றலுக்கும் பங்கேற்புக்கும் ஏற்பவே நிகழ்கிறது. பெண்களின் பங்குக் கேற்பத்தான் ஒரு சமுகத்தின் மதிப்பும் மரியாதையும் உயர்கிறது. பெண்களை ஒதுக்கி வாழும் சமுகம் முன்னேற்றம் அடைந்ததாக வரலாறு கிடையாது.

அதன் அடிப்படையில்தான் 'ஒரு பெண்ணுக்குக் கல்வி புகட்டினால் ஒரு கிராமத்துக்கே கல்வி புகட்டுவதாகப் பொருள்' என்ற பொன்மொழி உருவானது. 'பெண்களை ஒதுக்கும் சமூகம் விளைநிலமாகாது. களர் நிலமாகும். அதில் புல் பூண்டுகளோ செடி கொடி களோ முளைக்காது, புழுக்களும் பூச்சிகளும்தான் வளரும்' அதனால் ஆண்களும் பெண்களும் சரிநிகர்ச் சமமாக வாழும் எந்தவொரு நாடும் குன்றாத வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைவதைக் காணலாம்.

ஆனால், அதிகாரங் களும் உரிமைகளும் பேருக்கு அல்ல பொறுப்போடும் பொறுப்புணர்ச்சியோடும் அமைய வேண்டும். முஸ்லிம் பெண்கள் 'தாங்கள் பாதிக்கப்பட்டவர் கள்' என்ற மன உணர் வின்றி, தனிப்பட்ட பொறுப்புகளை ஏற்க முன்வர வேண்டும். அது தான் அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கும். பாதிக்கப்பட்ட உணர்வோடு ஒதுங்கி வாழத் தொடங்கினால் மனோ தத்துவ ரீதியாகவே உலகிலிருந்து ஒதுங்க வேண்டியதுதான்.



**hasani**
TRAVEL & TOURS (M) SDN. BHD
(674951-U)

**PAKEJ HAJI & UMRAH**



25-B, Jalan Kg. Baru, Bangunan Ban Bee,
08000 Sungai Petani, Kedah Darul Aman.
HOTLINE : 04-422 8222

**PAKEJ PENGEMBARAAN DALAM & LUAR NEGARA**

NOW EVERYONE CAN FLY WITH




Hasani Travel & Tours



- MYANMAR
- PHILIPPINES
- VIETNAM
- MACAU
- LAOS
- INDIA
- CHINA
- TAIWAN
- SRI LANKA
- CAMBODIA
- HONG KONG
- AUSTRALIA
- BANGLADESH
- U.A EMIRATES
- UNITED KINGDOM

PENANG
KUALA LUMPUR
SABAH & SARAWAK
SINGAPORE
INDONESIA
BRUNEI




RESTORAN YUSOOF (KL) SDN BHD ESTAB 1981

**RESTORAN YUSOOF DAN ZAKHIR SDN. BHD.**
455317-M

*Specialist Nasi Kandar High Class Muslim Food in KL City.*
*We also provide Catering Service.*

No: 44, 46, Jln Hang Kasturi, 50050 Kuala Lumpur.
*Tel: 03 2026 8685.*



NASMIR

**NASMIR HOLDINGS (P.P) SDN. BHD.**

- NASI KANDAR NASMIR SDN. BHD
- GOLDERN NASMIR HOTEL SDN. BHD
- NASMIR TOUR & TRAVEL AGENCY SDN. BHD.
- NASH DONUTS & BAKERY SDN. BHD
- NASMIR HARD GELATIN CAPSULES SDN. BHD.
- NASMIR FROZEN FOOD TRADING
- NASMIR MART

அறுசுவையும் ஆரோக்கியமும் நிறைந்த உங்களின் தரமான உணவகம்

**RESTORAN NASI KANDAR NASMIR SDN. BHD.**

- Nasi Briyani
- Nasi kandar
- Nasi Campur
- Roti Canai / Telur
- Murtabak
- Tomyam / Western food
- Mee Goreng Mamak
- Capati / Naan / Tosai



HQ: 1639, Jln Persusahaan, Bukit Tengah, Taman Pelangi, 13600 Bukit Mertajam, P. Pinang.

Branches: Bandar Perda, Simpang Ampat, Sungai Bakap, Pulau Pinang, Kulim, Sungai Petani, Alor Setar; Jitra, Ipoh.
Tel: 04 - 5071 639 / 5077 276 Fax: 04 - 5076 639

முஸ்லிம் பெண்கள் முதலில் தங்கள் மார்க்கத்தைப் புரிந்துகொண்டு, அறிவு பூர்வமாக கையாள வேண்டும். தந்தையர் தரப்பிலிருந்து எழக் கூடிய கேள்விகளுக்கு நிதானமாக வும் அறிவோடும் பதில் சொல்லத் தயாராக இருக்க வேண்டும். அறிவு கொளுத்தினால்தான் கடுமையான பிரச்னைகளை எதிர்நோக்கவும் பிரச்னை களுக்குத் தீர்வு சொல்லவும் இயலும்.

**நமது சுற்றுச் சூழல் எப்படி இருந்தாலும் நமது தனிப்பட்ட பொறுப்புகள்தான் ஒரு சமுதாயத்தை மாற்றியமைக்கும். ஒரு சமுதாய மாற்றம் அல்லது திருத்தம்தான் ஒரு நாட்டை மாற்றும். தீதும் நன்றும் பிறர்தர வாரா. இதைத்தான் சூரா அர்ரஃத் அத்தியாயத்தின் 11 ஆவது வசனம் கூறுகின்றது....**

உதாரணத்துக்கு, நாட்டுப் பொருளா தாரம் தொடர்பாக எந்தக் கேள்வி எழுந்தாலும் ஆண்களுக்குச் சமமாக நின்று பதிலும் தீர்வும் சொல்லக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும். சம மான சம்பளம் கோருவதில் மட்டுமின்றி, விஞ் ஞானம், அரசியல், வரலாறு என எந்தக் கோணமாக இருந்தாலும் ஆணித்தரமான கருத்து கள் கூறும் ஆற்றலர்களாகத் திகழ வேண்டும். அப்படித் திகழ்ந்த முஸ்லிம் பெண்கள்தான் கடந்த காலங்களில் ஆளுமை மிக்கவர்களாக விளங்கி, உலகப் போக்கையே நிர்ணயித் தார்கள். உலகம் ஏதாவது ஒரு முடிவை எடுக்கட்டும் என வேடிக்கை பார்ப்பவர்களாக முஸ்லிம் பெண்கள் இனியும் வாளாவிருத்தல் கூடாது.

**நம்பிக்கைப் பல்கலைக்கழகம்**

இஸ்லாமிய இலக்கியமும் வரலாறும் முழுக்க முழுக்க கல்வியையும் அறிவையும்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மார்க்க நம்பிக்கைக்கும் தனி மனித நடைமுறைகளுக்கும் தூண்களாக விளங்குபவை இஸ்லாமியக் கோட்பாடுகள்தாம். நாமே நமது செயல்களுக் கான சாட்சியாளர்கள் ஆவோம். நமது செயல்களின் விளைவுகளுக்கும் நாமே சாட்சி. நாமே நமது குறிக்கோளை வரையறுப் போராகவும் வகுப்போராக வும் இருக்கிறோம்.

நமது சொந்தக் குறிக் கோளை மாற்றியமைப்பது நமது தனிப்பட்ட பொறுப் புகள்தான். நமது சுற்றுச் சூழல் எப்படி இருந்தாலும் நமது தனிப்பட்ட பொறுப்புகள்தான் ஒரு சமுதாயத்தை மாற்றியமைக்கும். ஒரு சமுதாய மாற்றம் அல்லது திருத்தம் தான் ஒரு நாட்டை மாற்றும். தீதும் நன்றும் பிறர்தர வாரா. அர் ரஃத் அத்தியாயத்தின் 11வது வசனம் இதைத்தான் (எந்தவொரு சமூகமும் தன் பண்பு களை மாற்றிக் கொள்ளாதவரை உண்மையில் அல்லாஹ்வும் அச்சமுகத்தின் நிலையை மாற்றுவதில்லை) மிகத் தெளி வாகக் குறிப்பிடுகிறது.

ஆகவே, உலகின் மற்ற சமுதாயங்களுக்கு ஈடாக சில சமயங்களில் அதைவிடக் கூடு தலாகவே இஸ்லாமியப் பெண்கள் உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்றுத் திகழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதில் ஐய மில்லை. சமநிலை வேண்டும் என்ற கூக்குரலுக்கு இனியும் தேவையில்லை.

மலேசியா எல்லாப் பெண் களுக்கும் நிறைய வாய்ப்புகள் தரக் காத்திருக்கிறது. வெற்றிக்கான அடையாளங்களைத் தேடிக்கண்டு பிடிப்பது பெண்களின் கைகளிலேயே உள்ளது. மலேசியச் சமுதாயத்தில் பெண்கள் அடைந்து வரும் வெற்றிகளைப் பார்த்துப் பெருமைப் படுகிறோம். மலேசியாவின் முதல் பெண் அமைச்சரான துன் டாக்டர் ஃபாத்திமா ஹாஷிம் 1969ம் ஆண்டு மே 20ம் நாள் சமுக நலத்துறை அமைச்சரானார். அவரைத் தொடர்ந்து பல பெண்கள் அரசியலில் தீவிரம் காட்டி வெற்றி கண்டு வருகிறார்கள். அரசாங்கத்திலும் அதற்கு அப்பால் தனியார் துறையிலும் பல பெண்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

ஆகவே முஸ்லிம்-முஸ்லிம் அல்லாத பெண்கள் என்ற வேறுபாடும் இல்லாத நிலையில் ஆண்களோ பெண்களோ அவரவர் கல்விக்கும் திறமைக்கும் ஏற்ற தகுதிகளைப் பெற்று முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.



மைத். சுல்தான்

# எக்காலத்திற்கும்

**20 ஆம்** நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமிய அறிஞர் அப்துல்லா யூசுஃப் அலி அவர்களின் நினைவுச் சொற்பொழிவு (Memorial Lecture) கடந்த 08-01-11 சனிக்கிழமை மாலை தலைநகரில் 'மாஹ்சா' கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் பிரதமர் துன் அப்துல்லாஹ் அஹ்மது பதாவி அவர்கள் தலைமையில் நடை பெற்ற அந்த நிகழ்ச்சியில் இஸ்லாமியக் கல்வி மான்களும் முஸ்லிமல்லாதாருமாக 500க்கும் அதிகமான பெருமக்கள் கூடினார்கள். இஸ்லாமி யக் கல்வி வாரியத் தலைவரான டத்தோ


முஹம்மது இக்பால் மற்றும் இஸ்லாமியப் புத்தக வாரிய (IBT)த் தலைவரான பேராசிரியர் டாக்டர் ஒஸ்மான் பக்கார் ஆகியோரின் அறிமுக உரைகளுக்குப் பின்னர் துன் அப்துல்லாஹ் அஹ்மத் பதாவி அவர்கள் தலைமை உரையாற்றினார். அவர் தமது சுருக்கமான உரையில் மிக இளமையிலிருந்தே தாம் திருமறையை ஓதிப்படித்த அனுபவங்களை வெளியிட்டார்.

தங்கள் இல்லத்தை ஒட்டியே அமைந் துள்ள பள்ளிவாசலுக்கு, தமது 7 வயதிலிருந்தே தமது தந்தையாருடன் சென்று சுபுஹூத் தொழுகையை முடித்துக் கொண்ட பிறகும் மாலை நேர மஃரிப் தொழுகைக்குப் பிறகும் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருந்த காலம் இன்னமும் நெஞ்சில் பசுமையாக நிலைத்திருப்பதாகக் குறிப்பிட்டார். தான் ஓரளவு வளர்ந்த பிறகு மற்றவர்கள் தம்மை நோக்கி விடுக்கப்பட்ட கேள்வி, 'குர்ஆன் ஒரே விஷயத்தைத் திரும்பத்திரும்பச் சொல்லக் காரணம் என்ன?'

திருக்குர்ஆன் இறைவனால் நபிகளாருக்கு தரப்பட்ட மறைச் செய்திதான். மனுக்குலத்துக்குச் சிறந்த பாதையைக் காட்ட நினைக்கும் செய்தி அது. மனிதனோ நன்றியை மறந்தவன் மட்டுமல்ல மிகுந்த மறதிக்கும் உரியவன். அதனால்தான் வலியுறுத்திச் சொல்ல வேண்டிய செய்திகளை இறைவன் மறுபடியும் மறுபடியும் கூறியிருக்கிறான் என்றாரவர்.

'அப்துல்லா யூசுஃப் அலி இரண்டாவது நினைவுச் சொற்பொழிவு' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவை ஆற்றியவர் கனடாவைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞரான டாக்டர் முஸாஃபர் இக்பால். அவர் பேச எடுத்துக் கொண்ட தலைப்பு **'நம்பிக்கையாளர்களுக்கும் நம்பிக்கை இல்லாதாருக்குமிடையே...'** என்பதாகும். அவருடைய உரையின் சுருக்கம் இதுதான்.

'உலகில் இன்று கிட்டத்தட்ட 700கோடி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அரசியல் ரீதியில் 193 நாடுகளில் அவர்கள் வசிக்கிறார்கள். அப்படி வாழ்கின்ற மக்களில் நான்கு பேரில் ஒருவர் மனுக்குலத்துக்காக இறைவனால் இறக்கப் பட்ட கடைசி வேதம் திருக்குர்ஆன்



# ஏற்ற அருள்மறை!

என நம்புகிறார்கள். ஆனாலும் அப்படி நம்புகின்ற மக்களில் 80விழுக்காட்டினர் ஏதோ ஒரு விபத்து காரணமாக, அதாவது இந்தப் பெற்றோர்க்குப் பிறந்துவிட்டதால், நாமும் முஸ்லிம்களாகப் பிறந்துவிட்டதாக நினைக்கிறார்கள். அதனால் அவர்கள் இந்தத் திருமறையைப் பார்ப்பது மில்லை படிப்பதுமில்லை. தங்களுக்கு அது கிடைக்கவில்லையே என்பது ஒரு காரணமல்ல. அவர்களுக்கு அந்த மொழி புரியவில்லையே என்பதுதான் உண்மை.

கல்வி அறிவு நிரம்பிய மனிதர்கள் மத்தியில்கூட குர்ஆனிய மொழியில் அறியாமை இருப்பதற்கு வரலாற்றுப்பூர்வக் காரணம் உண்டு. 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரைகூட பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் ஐரோப் பியர்களின் காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது ஒரு மையக் காரணம். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை வேறு. அன்றைய மக்களின் பாரம்பரியமும் கட்டுக்கோப்பும் சமயத்தில் இருந்த தீவிர ஈடுபாடும் குலைந்து போய், அந்த இடத்தை மேற்கத்தியக் கல்விமுறைகளும் கலாச்சாரங்களும் மொழிகளும், நாகரிகங்களும் நிரப்பிக் கொண்டன கடந்த மூன்று நூற்றாண்டுகளாக.

அதன் விளைவாகத்தான் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த நம்பிக்கைகளெல்லாம் தடுமாறி அரசியலிலும் நிலைத்தன்மையின்மையும் குழப்பங்களும் தலைவிரித்தாடத் தொடங்கி, இஸ்லாமிய நிர்வாக முறைகளும் மறக்கடிக்கப்பட்டுவிட்டன. இத்தகைய குர்ஆனிய அறியாமைக்கு இடையிலும் கூட அதன் மீதிலான நம்பிக்கையாளர்கள் மத்தியிலும் அதன் உத்தரவுகளுக்கு அடிபணிந்து செயல்பட்டு வந்தவர்கள் மத்தியிலும் அது போட்டியிடப்படாத ஒரு வேதமாகவே விளங்கி வந்துள்ளது. இத்தனைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 114 அத்தியாயங்களையும், 77,439 வார்த்தைகளையும் 6,216வசனங்களையும் மட்டுமே பெற்றுத் திகழும் ஒரு சிறிய புத்தகம் தான் இத்திருமறை. என்றாலும் இறைவனின் சொந்தப் பாதுகாப்போடு இறக்கப்பட்டதால் அதன் புனிதம் இன்றும் இனி என்றும் நிலைத்திருக்கும் பெட்டகமாக விளங்குகிறது. அதில் பொறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் அரபு மொழியில் பல பொருள்களைக் கண்டுபிடிக்க முடிகிறது என சொல்லாராய்ச்சியாளர்கள் வியந்து கூறுகிறார்கள்.

மனிதன் தோன்றிய நாள்முதல் காலம் காலமாக இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ள அருள் மொழிகளின் முத்தாய்ப்பு இந்தத் திருக்குர்ஆன்தான் என்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள். எந்தக் காரணத்துக்காகவும், அது இறங்கிய காலத்திற்கு முந்திய காலத்திய (அரபு உள்ளிட்ட) எந்த மொழியின் கற்பனை வளத்துக்கும் ஒரு துளியும் விட்டு கொடுக்காத இறை மறை அது. முஸ்லிம் களில் பலர் குர்ஆனிய மொழியைப் புரிந்து கொள்ள முடியாவிட் டாலும் அவர்களின் வாழ்க்கை மையமாக அதனையே வரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் நிகழும் நல்ல, கெட்ட நிகழ்ச்சிகள்




திருக்குர்ஆனை ஓதித் தான் மன நிம்மதி யையும் அமைதியையும் பெறுகிறார்கள். மொழி புரியாவிட்டாலும் அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்கிறார் கள்.ஏக இறைவனால் வெளிப்படுத்தப் பட்ட மறை அது என்பதில் அவர்கள் எள்ளளவும் ஐயம் கொள்வதில்லை. மறுமை மீதும் கூலி கொடுக்கும் தீர்ப்பு நாளின் போதும் நரகம் சொர்க்கம் உண்டு என்றும் அவர்கள் அசைக்க முடியாத நம் பிக்கை கொள்கிறார்கள்.

ஒரு தனிப்பட்ட படைப்பாளனை அல்லது சமயத்தை நீங்கள் நம்ப வேண்டும் என்பதற்காக எந்தக் கருத்தும் இத் திருமறையில் கூறப்படவில்லை. எதை வேண்டுமானாலும் நீங்கள் நம்பலாம் அல்லது நம்பாமலும் இருக்கலாம். ஆனால், நீங்கள் காணுகின்ற அனைத்துமே ஓர் இறைவனால் படைக்கப்பட்டதுதான் என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் திருக் குர்ஆன் கூறும் செய்தி.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயல்பாகவே ஒரு படைப்பாளனுடனான உறவோடும் உள்ளத்தோடும்தான் பிறக்கிறது. அதற்கு அமைந்துள்ள இருதயம் உள்ளிட்ட எல்லா உறுப்புகளும் ஒரே மாதிரி அமைந்தவைதான். அதன் உயிர், ஆசைகள், இயங்கு முறைகள் முதலிய அனைத்தும் இறைவனின் விருப்பத்துக்கேற்பவே தூய்மையாகவும் வணக்க விழைவோடும்தான் வளர்கின்றன. சுருக்கமாகச் சொல்லவேண்டு மானால் ஒரு முஸ்லிமாகத்தான் படைக்கப்படுகின்றது.

பிறந்த சில மாதங்களில் புறத்திலிருந்து பல மாதிரியான உண்மைகளை உள்வாங்குகிறது ஒரு குழந்தை. அவற்றில் முதலாவது, கேட்கும் ஆற்றல். அடுத்து பார்க்கும் திறன். சுற்றுச் சூழலைத் தெரிந்து கொள்ளும் தன்மை. இப்படியே ஒவ்வொரு சக்தியையும் மெல்ல மெல்ல இறைவனின் உதவியால் பெறும் அந்தக் குழந்தைதான் நாளடைவில் தனது அகப்பார்வையை அதாவது சிந்தனை ஆற்றலைப் பெருக்கத் தொடங்குகிறது. அதன் விளைவாக ஒரு குறிக்கோள் ஏற்படுகிறது. அந்தக் குறிக்கோள்தான் நம்பிக்கையாக மலர்கிறது.அந்த நம்பிக்கையையும் வழிகாட்டலையும் வழங்கி அதற்கெல்லாம் காரணகர்த்தாவகத் திகழ்பவன் வல்ல அல்லாஹ்.

அந்த வழிகாட்டலுக்கு அடித்தளமாக அமைவது திருக்குர்ஆன். வளர்ந்த பெரியவர்களுக்கு இத்திருமறையை ஓதித்




**முதல் படம்: மஹ்சா மருத்துவப் பல்கலைக் கழகத் தலைவர் டத்தோ ஹாஜி டாக்டர் ஹனிஃபா துன் அப்துல்லாஹ்விடம் நூலைப் பெறுகிறார்.**
**2ஆவது படம்: டாகடர் முஸஃப்பர் இக்பால், டத்தோ இக்பால், துன் அப்துல்லாஹ் நூல்களைப் பார்வையிடுகின்றனர்.**
**3ஆவது படம்: குவைத் ஃபைனான்ஸின் இயக்குநர் ஹாஜி இஸ்மாயில் ஷெரிஃப் ஆற்றப்பட்ட உரை மீது வினா தொடுக்கும் காட்சி.**
**4ஆவது படம்: கூட்டத்திற்கு வருகை தந்தோரில் ஒரு பகுதி.**

**ஏழு வயதாகுமுன்னரே ஒரு குழந்தையின் முதல் பணியாகப் பெற்றோர் திருக்குர்ஆனை ஓதிமுடிக்கக் கற்றுத் தந்துவிட்டால் அவர்களின் ஒரு பெரிய கடமை வாழ்க்கையில் முடிந்ததாகிவிடும். அதற்குப் பிந்திய வளர்ச்சி முழுமையானதாக அமையும். இதுதான் முஸ்லிம்களுக்கான பாரம்பரியம்...**

தெரிந்துகொள்ளும் ஆற்றல் வேகக் குறைவாகத்தான் இருக்கிறது. ஏழு வயதாகுமுன்னரே ஒரு குழந்தையின் முதல் பணியாகப் பெற்றோர் திருக்குர்ஆனை ஓதிமுடிக்கக் கற்றுத் தந்துவிட்டால் அவர்களின் ஒரு பெரிய கடமை வாழ்க்கையில் முடிந்ததாகிவிடும். அதற்குப் பிந்திய வளர்ச்சி முழுமையானதாக அமையும். இதுதான் முஸ்லிம்களுக்கான பாரம்பரியம்.

ஓர் அவப்பேறு என்னவென்றால் பெரும்பாலான முஸ்லிம் பெற்றோர் தங்களின் அந்த முதல் கடமையில் தவறிவிடுகிறார்கள் என்பதுதான். அதற்கு மாறாக புற வாழ்க்கை மேம்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தி அந்தப் பிள்ளைகளை, புறக்கல்வியில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். அதன் விளைவாக புறவாழ்க்கைக்குத் தேவையான அத்தனை தேவைகளையும் தெரிந்து கொள்ளும் அக்குழந்தை அகவாழ்க்கைத் தேவையை அடியோடு புரிந்துகொள்ளாமலே போய்விடுகிறது.

இப்படித் தோல்விகாணும் குழந்தைகளெல்லாம்தான் நம்பிக்கை இல்லாத மனிதர்களாக வளர்கிறார்கள். வெற்றிபெறும் குழந்தைகள் நம்பிக்கை உள்ள மாமனிதர்களாக வளர்கிறார்கள்.

## அல்லாமா யூசுஃப் அலி நினைவுச் சொற்பொழிவாளர் பற்றி....



இஸ்லாமியக் கல்வி வாரியமும் இஸ்லாமிக் புக் ட்ரஸ்ட்டும் (IBT) இணைந்து ஏற்பாடு செய்திருந்த யூசுஃப் அலி நினைவுச் சொற்பொழிவில் உரையாற்ற வந்திருந்த முஸஃப்பர் இக்பால் கனடாவில் வசிக்கும் ஓர் விஞ்ஞானி. இஸ்லாமும் அறிவியலும் எனும் சஞ்சிகையின் ஆசிரியர். இஸ்லாமிய வாழ்வியலை அறிவியல் பூர்வமாக அணுக வேண்டும் என்று உலகெங்கும் உரையாற்றி வருபவர். இஸ்லாமியப் பார்வையில் அறிவியலும் மறுமலர்ச்சியும் பற்றி இவர் தொடர்ந்து எழுதி வருகின்றார்.

டாக்டர் முஸஃப்பர் இக்பால், கனடாவில் உள்ள Saskatchewam பல்கலைக் கழகத்தில் இயற்பியல் துறையில் டாக்டரேட் பட்டம் பெற்றவர். அறிவியல் விஞ்ஞானியான இவர் தனது ஆய்வுக்கூடத்தை முழுமையாக விட்டு 1983 ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய ஆய்விலும், ஆன்மிக வழியிலும், அறிவியல் ரீதியிலும் சிந்தித்து செயல்பட ஆரம்பித்தார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் பிறந்த டாக்டர் முஸஃப்பர் 1979 ஆம் ஆண்டு முதல் கனடாவில் வசித்து வருகின்றார். ஆனாலும் இவர் விஸ்கான்சின் மேடிசன் பல்கலைக் கழகம், மெக்கில் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் அறிவியல் துறையில் 1988 வரை பணியாற்றி இருக்கின்றார்.

1990– 1999 வரை OIC எனப்படும் Organisation of Islamic Conference ன் அறிவியல் தொழில் நுட்பக் குழுவின் இயக்குநராகவும் செயலாற்றி இருக்கின்றார். 1991 முதல் 1996 வரை பாகிஸ்தானின் அறிவியல் அகடமி யின் தலைவராக செயலாற்றி இருக்கின்றார். 1999 முதல் 2001 வரை டாக்டர் இக்பால், அமெரிக்காவின் பெர்க்லே நகரில் செயலாற்றும் Centre for Theolgy and Natural Sciences (CTNS), Berkeley, USA எனும் நிறுவனத்தின் திட்ட இயக்குநராகவும் செயலாற்றினார்.

டாக்டர் இக்பால் 21 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார். இஸ்லாத்திற்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும், மேற்கில் இஸ்லாம் என்பது குறித்தும், இன்றைய சிக்கலான சூழலில் முஸ்லிம்கள் என்பது பற்றியும், இஸ்லாமிய அறிவியலின் வரலாறு என்பது குறித்தும் நூற்றுக்கும் அதிகமான கட்டுரைகளை சர்வதேச பத்திரிகைகளில் எழுதி இருக்கின்றார்.

மிகுந்த ஆய்வுகளுக்குப் பிறகு ஏழு தொகுதிகளாக Integrated Encyclopedia of the Qur'an எனும் மிகப் பெரிய நூல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இதற்காக பல்வேறு அறிஞர்கள் உழைத்து வருகின்றனர். அந்த அறிஞர் குழுவின் தலைவராகவும் இருந்து முஸஃப்பர் இக்பால் அரும்பாடுபட்டு உருவாக்கி வருகின்றார். அந்த ஏழு தொகுதிகளும் வெளிவந்தால் இஸ்லாம் குறித்து ஆங்கிலத்தில் வெளிவந்த மிகப் பெரிய கருவூலமாக அது அமையும்.

# RESTORAN PADANG KOTA SDN. BHD.



We are specialised in

- Nasi Briyani
- Nasi Kandar
- Nasi Tomato
- Naan

No. 28-1, Jalan PUJ 5/15, Dataran Sunway, Kota Damansara.
***Tel : 03 6157 5634 Fax : 03 6142 4020***

# METRO SECURITY SERVICES SDN. BHD.

(Co. No: 120594 X)



15, Lorong Maarof, Taman Bangsar, 59000 Kuala Lumpur.
Email: info@metrosec.biz Website: www.metrosec.biz

- Security Services
- Private Investigation
- Security System
- Courier Services

***Tel: 03 2282 8300 (Hunting Line)***
***Fax: 03 2282 6200***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Selangor | 03 5121 6473 | N.Sembilan | 06 6774728 | Perak | 05 5062 808 |
| Penang | 04 3333 977 | Kedah | 04 4315 978 | Melaka | 06 2827 050 |
| Johor | 06 9539 864 | Pahang | 095141 825 | Sabah | 088 726044 |
| Sarawak | 082 233092 | Kelantan | 09 7781 998 | Terengganu | 09 6251 184 |

Subaidah™
HOLDING (774336 K)


We are here

LIMRA
jewellery

LIMRA
TRAVEL AND TOURS

63, Lebuh Queen, 10200 Georgetown. Tel 012-4282656 (Rajaludin) 012-4862656 (Muhaideen)


KEPUASAN ANDA KEBANGGAAN KAMI
RANGKAIAN ANAK MAJU
ALI MAJU
RESTORAN ALI MAJU 1
589535 - M
LOT C-6,BLOK C, TINGKAT 1, PUSAT BANDAR DAMANSARA
50490 KUALA LUMPUR. TEL: 03 - 20934163 FAX: 03 - 20924163.
Email: aalimaju@yahoo.com
www.alimaju.com
No.1, Jalan Rampai Niaga 3, Rampai Business Park Setapak, 53300 Kuala Lumpur. Tel: 03 - 4149 3163.
No.1, Jalan AU 1A/4B, Taman Keramat Permai, 54200 Kuala Lumpur. Tel: 03 - 4252 3030.
No.20, Jalan UP 1/1, Taman Ukay Perdana, 68000 Ampang, Selangor D.E. Tel: 03 - 4102 5036.
No.18, Tingkat Bawah, Blok A, Vista Magna, Jalan Metro Prima, Kepong, Kuala Lumpur. Tel: 03 - 6250 1341.
No. 47, Jalan Bandar Rawang 2, 48000 Rawang, Selangor Darul Ehsan. Tel: 03 - 6093 4163.
Level 3, STCP, Block - A, KL International Airport (KLIA) 64000 Sepang Selangor D.E. Tel: 03 - 8787 3768.
Lot A16, A18&A20, KLIA Commercial Center, Jalan KLIA 1/60, 43900 Sepang. Tel: 03 - 8783 3133.
Kuarters Jenis Apartmen, P18R12, Presint 18, Putrajaya 62100 Putrajaya. Tel: 012 - 7497033
...We Serve Delicious Food with Quality...
NASI AYAM
WESTERN FOODS
MURTABAK
NASI BRIYANI
FRESH JUICES
www.alimajugraphics.com


AMAR LEO SDN. BHD
உங்கள் நிறுவன கணக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு!
✔ முடிக்கப்படாத பழைய கணக்குகளை முடித்துத் தருதல்
✔ வருடாந்திர கணக்குகளை முடித்துத் தருதல்
✔ வருமான வரி கணக்குகளைத் தகுந்த ஆலோசனைகளுடன் முடித்துத் தருதல்
✔ கணக்குகளைக் கம்ப்யூட்டர் வழி செய்தல்.
✔ கணக்குகளைப் பகுதி நேர, முழு நேர அடிப்படையில் செய்து தருதல்
✔ வங்கிக் கடனுக்குரிய ஆலோசனைகள்
✔ கணக்குகளை விரைவாகவும் சரியாகவும் முடித்துத் தருதல்.
Lot 1, 1st Floor, 14, Jalan Kemajuan, 59100 Bangsar Utama, Kuala Lumpur.
Tel: 03 2284 2426 Fax: 03 2283 5032


Emas Sri Pinang Sejah 1981
Emas Sri Pinang Sdn. Bhd.
Main Outlet & Office
6, Ground Floor, Semua House, Jalan Masjid India, 50100 Kuala Lumpur.
Off. Tel : 03 2693 0873 Outlet No. 03 2694 5436
Fax : 03 2693 7441
Email : emassri@streamyx.com
Kajang Outlet
Lot G-05, Metro Point Complex, Jalan Semenyih, 43000 Kajang, Sealangor.
Outlet No. 03 8736 5076 Fax : 03 8736 4167
email : emassri@streamyx.com

எம்.எஸ்

## திருக்குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்

# அல்லாமா யூசுஃப் அலி (1872 - 1953)



அல்லாமா யூசுஃப் அலி – புனிதத் திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு சிறந்த விளக்கவுரைகளும் எழுதி வெளியிட்ட மிகச் சிறந்த இந்திய முஸ்லிம் பேரறிஞராவார். இவரது முதல் வெளியீடு லாஹூரில் 1934இல் வெளியிடப்பட்டது. இன்றைக்கு 53 ஆண்டுகளுக்கு முன்னர் இலண்டனில் இருந்தபோது உயிர்நீத்தார் யூசுஃப் அலி.


இவ்வளவு பெரிய அறிஞர் அவருக்குத் தேவைப்பட்ட போது சொந்தக் குழந்தைகள், சமுதாயம் உள்ளிட்ட எவரிடமிருந்தும் எந்த உதவியும் கிடைக்கவில்லை என்பது ஓர் அவமானகரமான நிலையாகும். அவர் இன்று தமது அறையிலிருந்து வெளியில் நடந்துவர முடிந்தால் இன்று அவருக்கு நடக்கும் இந்தச் சிறப்புகளையும் புகழையும் நிச்சயம் மறுதலித்துவிடுவார்.

இன்று அவருக்கு நிகழும் நினைவுகூரல்கள் யாவும் சான்றோர்களின் துயரங்களைத்தான் படம்பிடித்துக்காட்டும். குர்ஆனின்பால் அர்ப்பணிப்புச் செய்துகொண்ட ஆண்களும் பெண்களும் தனிச்சிறப்புக்கு உரியவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் அவர்களின் இதயக்குரல் யூசுஃப் அலியின் துயரக்குரலைப் போலவே ஒலிக்கும் என்பது திண்ணம்.

மர்மடிக் பிக்தால் (Marmaduke Picktall) தமது 19 ஆம் அகவையில் டமாஸ்கசின் பெரிய பள்ளியில் நுழைந்து இஸ்லாத்தைத் தேர்வு செய்வதாக பிரகடனம் செய்தபோது அங்குள்ள தலைமை இமாம் அவர்கள் ‘முதலில் உன் தாயின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வா’ என்ற பதிலைக் கேட்டு அவருடைய இதயம் எவ்வாறு ஒலித்திருக்கும்?

ரப்பிகளின் பரம்பரையைச் சேர்ந்த 22 வயதான லியோபால்ட் வீஸ் (Leopold Wiess) 1920 ஆம் ஆண்டில் ஜெருசலத்துக்கு வருகை புரிந்தபோது எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருப்பார்? அரபு நிலங்களை தூய்மைப்படுத்தப்போவதாக யூதர்கள் பிரகடனப்படுத்திய அந்தக் கணம் எப்படி இருந்திருக்கும்?

இதே அனுவத்தைத்தான் 1926 ஆம் ஆண்டு அந்த இளைஞரும் பெர்லினில் அடைந்தார். ‘வீட்டுக்குத் திரும்பிவந்து என் மேசைக்கு வந்தபோது நான் ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த குர்ஆன் அப்படியே இருக்க, அதனை மூடிவிடத் தீர்மானித்தேன். மூடப்போகும்போது என்




**திருக்குர்ஆன் விளக்கம் என்ற தமது நூலின் முன்னுரையில் யூசுஃப் அலி தமது தந்தையார் கான் பஹதூர் அல்லாபக்ஷ் யூசுஃப் அலி பற்றிக் கூறும் கருத்துகள் நம் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டியவை. 'எனது 4 -5 ஆம் வயதிலேயே அரபு வார்த்தைதகளை எழுத்துக்கூட்டிப் படிக்க ஆரம்பித்தேன். எடுத்த எடுப்பிலேயே ராகம் போட்டு இசையோடுதான் படித்தேன்...'**

கண்களில் அல் – தக்கத்தூர் சூராவின் (பிறரைவிடக் கூடுதலாக உலகயாதவாதிகளைப் பெறவேண்டும் எனும் எண்ணம் உங்களை மெய்மறதியில் ஆழ்த்திவிடுகிறது, நீங்கள் மண்ணறைகளைச் சென்றடையும்வரை இதே சிந்தனைதான். விரைவில் உங்களுக்குப் புரிந்துவிடும் இந்த நடத்தையின் இறுதி முடிவை. உறுதியாக நீங்கள் அறிந்திருந்தால் திண்ணமாக நீங்கள் நரகத்தைப் பார்க்கத்தான் போகிறீர்கள். பிறகு அந்நாளில் அதுபற்றி வினவப்படத்தான் போகிறீர்கள்) என்ற வசனங்கள் தென்பட்டன.

'சில கணங்கள் பேச்சின்றி அமர்ந்திருந்தேன். என் கைகளில் அந்த வரிகள் அசைந்து ஆடிக் கொண்டிருந்தன. எல்லா சந்தேகங்களுக்கும் ஒரு திடீர் முடிவு கிடைத்துவிட்டதாக உணர்ந்தேன்'. அந்த பெர்லின் பள்ளிவாசலில் தம்மை ஒரு முஸ்லிமாகப் பிரகடனம் செய்து கொண்டு முஹம்மது அஸத் என்ற பெயரையும் வரித்துக் கொண்டேன்' என்கிறார்.

பேராசிரியர் ஹமீதுல்லாஹ்வின் அனுபவத்தைக் கேளுங்கள். 1950 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பாகிஸ்தானின் முதல் இஸ்லாமிய சட்டத்திட்டத்தை வரைந்து கொண்டிருந்தேன். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவருக்கு அந்நாட்டின் மிக மதிப்புமிக்க விருது ஒன்றை வழங்கினார்கள். ஆனால் அதனோடு சேர்த்து அவர்கள் வழங்கிய ரொக்கத்தை மறுதலித்துவிட்டேன். 'இங்கு இதனைப் பெற்றுக் கொண்டால் 'அங்கே' எனக்கு என்ன கிடைக்கும்' என்பது அவருடைய கேள்வியாக இருந்தது. 'அங்கே' என டாக்டர் ஹமீதுல்லாஹ் குறிப்பிட்டது மறுமையைத்தான். அவருடைய பணம் இஸ்லாமாபாத்தில் உள்ள இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அல்லது 25 வயதான யூசுஃப் அலியின் உணர்வுகளைப் பாருங்கள். முஹம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியின் நிறுவனரைச் சந்தித்த அனுபவம் அது. அவர் சொல்கிறார், 'பிற்காலத்தில் சர் சையது அஹமத் கான் என்ற அறிஞரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். முஸ்லிம்கள் புத்துயிர் பற்றி மிகச் சில தடவை மட்டுமே அவரோடு பேசியிருக்கிறேன். என்னுடைய பொது வாழ்க்கைப் பயணம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அந்தச் சந்திப்பே நிர்ணயித்தது. இந்த மாபெரும் அறிஞரைச் சுற்றித்தான் எனது கல்விச் சூழலும் குறிக்கோளும் அமைந்தது என்கிறார் அவர். சர் சையது 1989 ஆம் ஆண்டு மறைந்தார். ஆனாலும் 1920 ஆம் ஆண்டுதான் MAO என்ற அக் கல்லூரி அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம்' என்ற பெயரைப் பெற்றது.

முஸ்லிம் மறுமலர்ச்சிக்காக யூசுஃப் அலி ஆற்றிய பணிகளும் அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அளவிட இயலாதவை.

திருக்குர்ஆன் விளக்கம் என்ற தமது நூலின் முன்னுரையில் யூசுஃப் அலி தமது தந்தையார் கான் பஹதூர் அல்லாபக்ஷ் யூசுஃப் அலி பற்றிக் கூறும் கருத்துகள் நம் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டியவை. 'எனது 4 –5 ஆம் வயதிலேயே அரபு வார்த்தைதகளை எழுத்துக்கூட்டிப் படிக்க ஆரம்பித்தேன். எடுத்த எடுப்பிலேயே ராகம் போட்டு இசையோடுதான் படித்தேன். அதே சமயத்தில் அதன் அர்த்தங்களையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணினேன். அந்த இளம் வயதிலேயே 'கத்தம்– குர்ஆன் ஓதிமுடித்த' சடங்கு பற்றிய நினைவு மங்கலாக உள்ளது. இதனை ஒரு முழுமையின் தொடக்கம் என்று குறிப்பிடுவேன். ஆன்ம உணர்வுக்கான விழிப்பு ஆயுள் பூராவும் தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும். மதிப்பிற்குரிய என் தந்தையார்தாடின் எனக்கு அரபு கற்றுக் கொடுத்த ஆசான். என்றாலும் அவருடைய இரத்தத்திலிருந்தே அது இயற்கையாகவும் ஊற்றெடுத்திருக்க வேண்டும். இந்தப் புத்தகம்தான் உலகின் மிகச் சிறந்த மொழியாகவும் உலகின் பேரழகு மிக்க இலக்கியமாகவும் அத்தனை அறிவையும் ஊட்டும் நூலாகவும் இருக்க வேண்டும் என என் உள்மனம் சொல்லிக் கொண்டே இருந்தது. அதுதான் மனித இதயத்துக்கு பேரின்பத்தைத் தரவல்லது.'



பாங்கு

நயீம்

# தொழுகைக்கான பாங்கோசை புரிந்துணர்வை வளர்க்கும்!

அதான்' எனப்படும் தொழுகைக்கான அழைப்பு முழக்கம் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதாருக்குமிடையே எந்தவொரு கசப்புணர்வையும் ஏற்படுத்தாமல் இருக்க சில வழிமுறைகளைக் கையாள வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பாங்கொலியின் சத்தத்தைக் குறைப்பதும் சமயக் கலந்துரையாடல் நடத்துவதும் அவற்றில் அடங்கும்.

ஒரு பள்ளிவாசலைச் சுற்றி வாழும் மக்கள் எத்தகையவர்கள், எவ்வளவு நெருக்கத்தில் அல்லது தொலைவில் பள்ளிவாசல்கள் அமைந்துள்ளன என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து அதற்கேற்ப 'அதான்'முழக்கத்தின் (வோல்யும்)சத்தத்தை வரையறுத்துக்கொள்ளலாம் என கிளந்தான் முஃப்தி டத்தோ முகம்மது ஷுக்ரி முகம்மது ஆலோசனை தெரிவித்துள்ளார். இதன் மூலம் முஸ்லிம் அல்லாதார் இரண்டு விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். எவ்வளவு நெருக்கத்தில் அல்லது தொலைவில் தாங்கள் இருக்கிறோம் என்பதையும், 'அதான்' அழைப்பொலி முஸ்லிம்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் தெரிந்துகொள்ள முடியும் என்றார் முஃப்தி.

பாங்கொலியால் முஸ்லிமல்லாதாருக்கும் பயன்கள் உண்டு. சில இடங்களில் பாங்கொலியைக் கேட்டவுடனே கடிகாரத்தைப் பார்க்காமலே நேரத்தைத் தெரிந்துகொள்ளலாம்.அத்துடன் இறைவனைத் தொழவேண்டும் என்ற நினைவூட்டலாகவும் அது அமையும். ஓர் இடத்தில் பெரும்பான்மை மக்கள் யார் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் எனக்கூறிய இமாம் ஷுக்ரி, சமய விவகாரங்கள் மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருந்தாலும் சமய மன்றங்கள் அதான் விஷயத்தில் விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்கலாம் என்றார்.


கருத்து வேறுபாடு எழக்காரணம் சமயப் புரிந்துணர்வு இன்மைதான். அதைப்பற்றி சாந்தமான முறையில் விளக்கிக்கூற வேண்டும். அது பொறுமையை அதிகரிக்க உதவும். கடந்த டிசம்பர் மாதம் பந்தாய் டாலாம் கம்போங் கிரிஞ்சி பகுதியில் உள்ள அல்-கதீஜா பள்ளிவாசல் அதான் சத்தத்தைக் குறைக்குமாறு பிரதமர் அலுவலகத்துக்கே புகார் அனுப்பி இருந்தார் வழக்கறிஞர் Ng Kiam Nam. ஜாக்கிமுக்கும் சிலங்கூர் சமய மன்றமான ஜாய்சுக்கும் அப்புகார் அனுப்பிவைக்கப்பட்டது. அதற்காக அந்த வட்டாரத்தைச் சேர்ந்த 100பேர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து ஜனவரி முதல் மாதத்தில் அந்த திரு மிர், லெம்பா பந்தாய் அம்னோ அலுவலகத்துக்கே சென்று தமது புகாரை மீட்டுக்கொண்டு மன்னிப்பும் கோரினார். முஸ்லிம்களின் உணர்வையும் 'அதாமி'ன் தேவையையும் தாம் புரிந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

'அதான்' என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையில் ஒரு முக்கியமான அங்கம் என சமயத்துறை வல்லுனரான டத்தோ Abu Hassan Din Al-Hafiz. புதிதாகப் பிறக்கும் குழந்தையின் செவிகளிலும் இல்லத்திலும் ஓதப்படும் முதல் பாடலே 'அதான்'தான் எனக்கூறும் அவர், அதன்

எதிரொலிதான் பள்ளிவாசல்களிலும்,சமயப் பள்ளிக்கூடங்களிலும், சாலைகளிலும், சமூக மண்டபங்களிலும் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளையும் தவறாமல் கேட்டுக் கொண்டிருக்கிறது என்றார்.

அதற்கு ஒரு தனி முக்கியத்துவம் இருக்கிறது.' முவஸ்ஸின்' எனப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி கஃபாவை நோக்கி நின்றவாறு, காதுகளைக் கண்களால் பொத்திக்கொண்டு, உச்சஸ்தாயியில் இனிமையாக அந்த அழைப்பை விடுக்கும் போது ஒரு முஸ்லிம் எந்தக் கடமையில் இருந்தாலும் தன்னை மறந்து தொழுகைக்கு விரைவதைக் காணலாம். மின்னியல் ஒலிபெருக்கிக் கருவிகள் இல்லாத பழங்காலத்தில் 'அதான்' என்பது எல்லோர்க்கும் கேட்கும் வகையில் சத்தமாக அமைந்திருக்க வேண்டும் என்பது வரலாறு. பிற்காலத்திலும் அதான் சத்தம் கூடுதலாகவும் தெளிவாகவும் இருந்தால்தான் அதன் 'அழைப்பு' ஒலி அனைவர்க்கும் உரிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும் என நம்பப்பட்டது–இன்னமும் நம்பப்படுகிறது.

'கூலியா' போன்ற மற்ற ஓதல்களும் உரைகளும் பள்ளிக்கு உள்ளேயே கேட்டால் போதும். ஆனால் அதானுக்கு மட்டும் ஒலிபெருக்கி தேவை என்கிறார் பேரா மாநில முஃப்தியான டான்ஸ்ரீ Harussani Zakaria. "அதா'னுக்கு என்று தனியாக எந்தவொரு வரைமுறையும் தேவையில்லை என்கிறார் பிரதமர் துறை அமைச்சரான டத்தோஸ்ரீ ஜமில் கிர் பஹரோம். இதுநாள்வரை இது ஒரு பிரச்னையாக இருந்தது கிடையாது, இனியும் பிரச்னையாக இருக்கத் தேவையில்லை. எல்லா மக்களுக்கும் இறைவனையும் அவனை வணங்க வேண்டிய அவசியத்தையும் நினைவு படுத்தும் ஓர் அம்சமாக இந்த அதான் அமையட்டும்.



## நன்மையானவற்றைப் பற்றி நபி நாயகம் (ஸல்)

நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நன்மையானவற்றின் பக்கம் வழிகாட்டுபவனின் நிலை அந்த நன்மையான செயல்களைச் செய்பவரின் நிலைக்கு ஒத்ததாகும்.”

**விளக்கம்:** அதாவது, நற்செயலைச் செய்யும்படி மற்றவருக்கு வழிகாட்டுவதும் அதில் ஈடுபடும்படி மற்றவரைத் தூண்டிவிடுவதும் ஒரு நற்செயலாகும்.

ஒருவரின் ஊக்குவிப்பால் இன்னொருவருக்கு நற்செயலில் ஈடுபடுகின்ற வாய்ப்பு கிடைக்கின்றது எனில், நற்செயலைச் செய்யும்படி ஊக்குவித்தவருக்கும் அந்த நற்செயலில் பங்கு உண்டு. அவரும் அந்த நற்செயலைச் செய்தவராகவே கருதப்படுவார்.

ஏனெனில், அவர் வழிகாட்டாமலும் ஊக்குவிக்காமலும் இருந்திருப்பாரேயானால் அந்த நற்செயல் நடந்தே இருக்காது.

# RESTORAN NUUR BERKAT SDN. BHD.

**Hj. Ameer Ali**
Pengarah
012 4295536

**Tamu**
Manager
012 5887195

No. 29, Jalan Wawasan Jaya 3, Taman Wawasan Jaya,
34280 Parit Buntar, Perak Darul Ridzuan.

***CATERING SERVICE CALL 012 5887195***

# ANSARI AGENCIES SDN. BHD.

***THERMOMETERS & HYDROMETERS***

18- A, 1st Floor, Jalan MJ/7, Medan Maju Jaya,
7th Mile,Jalan Klang Lama, 46000 Petaling Jaya,
Selangor, Malaysia.
Tel: 03 7784 3918, 03 7784 0053 Fax: 03 7784 4135
email: anslab@tm.net.my, anslab@streamyx.com
Website: www.ansiabzeal.com

(867934-H)


# A Z TRAVEL & TOURS SDN. BHD


***Hj. Safeek Mohd B. Hj. Mohd Tajuddin***
Managing Director / Hp: 019 236 6878

**Ticketing, Tour Packages, Hotel Reservation,**
**Visa Application & Other Services**
1-90, Level 1, Plaza Idaman, No: 70, Jln 6/21D,
Batu 5, Jln Gombak, 53100 Kuala Lumpur. Malaysia.
**Tel: +603 4022 4000 (Hunting Line)**
**Fax: +603 4022 5000**
**Email: aztravel@ymail.com**

**We Organize HAJ & UMRAH**

**Restoran Nasi Kandar AZ**
**RN DELIMA (M) SDN. BHD.**
**Money Changer**
**Tel: 03 3168 3300**
**Fax: 03 3168 3400**





# புஷ்ஷைச் செருப்பினால் அடித்தவர், இராக் பிரதமரை எதிர்த்து வழக்கு!

முன்னாள் அமெரிக்க அதிபர் ஜார்ஸ் புஷ் மீது செருப்பை வீசிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இராக்கியப் பத்திரிகையாளர். தம்மை ஒன்பது மாதம் சிறையில் அடைத்து சித்ரவதையும் செய்ததற்காக இராக் பிரதமருக்கு எதிராக வழக்குத் தொடர்கிறார்.

'அதிபர் புஷ்ஷுக்கு இறுதி மரியாதை' (The Last to President Bush) என்ற தலைப்பிலான தமது முதல் நூலில் கையெழுத்திட்டபோது Mumtazar Al - Zaidi என்ற அந்த எழுத்தாளர் இவ்வாறு தெரிவித்தார். அந்த நிகழ்ச்சி கடந்த டிசம்பர் 14 ஆம் நாளன்று பெய்ரூத்தில் நடைபெற்றது. அதே டிசம்பர் 14 ஆம் நாள் 2008 ஆம் ஆண்டுதான் பக்தாத் பத்திரிகையாளர் மாநாடொன்றின்போது செருப்பை வீசி 'நீ ஒரு நாய்' என்றும் திட்டி, ஒரே நாளில் உலகப் புகழ்பெற்றார் இந்த Al Zaidi 1991 ஆம் ஆண்டு தொடங்கிய வளைகுடாப் போரின் விளைவாக இராக் அடைந்த துயரங்களையும் அந்தச் செருப்புப் படலம் விளக்கியது.

அவரது கையெழுத்துச் சடங்கு, சரியாக செருப்புச் சடங்கின் ஈராண்டு நிறைவு நாளன்று இடம்பெற்றது ஒரு பொருத்தமான ஏற்பாடாகவும் அமைந்துவிட்டது. பிரதமர் Nouri Al-Malikiயுடன் கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டுக்காக புஷ் வந்து சேர்ந்த அந்தக் கணத்திலிருந்து அவருக்கு ஏற்பட்ட மனவெறுப்பையும் உணர்வுகளையும் விவரிப்பதாக எழுதப்பட்ட நூல் அது.

இத்தனை ஆண்டுக் காலமாக இராக்கிய ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் முதியவர்களையும் இலட்சக்கணக்கில் கொன்று குவித்த மனிதனல்லவா இவன் என நினைத்தபோது பல கொடுமைகள் என் மனத்திரையில் படமாக ஓடி என் உடம்புக்குள் ஒரு பூகம்பத்தையே வெடிக்கச் செய்தது என்கிறார் அவர். அப்படிச் சில நிமிடங்கள் கடந்தபோதுதான் அவர் தமது இருக்கையிலிருந்து குதித்து எழுந்து தனது இரு செருப்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக புஷ் மீது வீசி எறிந்துவிட்டு, 'இதுதான் உனக்குரிய பிரியாவிடை, நாயே' எனக் கத்தினார்.

அந்தக் கணமே அவர் கைது செய்யப்பட்டு 'தாக்கிய' குற்றத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஒன்பது மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட அவர் அதில் மூன்று மாதங்கள் தனிமைச் சிறையிலும் அடைத்து வைக்கப்பட்டார். என்னை விசாரணை செய்த அதிகாரிகள் மின்சார அதிர்ச்சி உள்ளிட்ட பல சித்ரவதைகளை நடத்தினர் எனக்கூறிய அவர் அந்த அதிகாரிகளில் சிலர் அல் – மாலிக்கியின் (இன்றைய பிரதமர்) உறவினர்கள் எனக் குறிப்பிட்டனர்.

அதனால் ஸ்விஸ் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகத் தாம் வழக்குத் தொடர்வதாகவும், அடுத்த சில நாட்களில் அவரைக் கைது செய்வார்கள் எனத் தாம் எதிர்ப்பதாகவும் ஹட – ஹணயனைை கூறுகிறார். தற்போது அவர் லெபனானியத் தொலைக்காட்சியில் ஓர் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.

*– நௌஃபல் நாசிர்*

சிறப்புக் கட்டுரை

அதூஃபா நாஸிஹா



அண்ணலாரின் அன்பு மகள் ஜைனபை ஹாபர் அடித்த அடியை யாரும் மறந்துவிடமுடியாது. அவனது அடியால் மயங்கிவிழுந்தார் ஜைனப். அப்போது ஜைனப் கர்ப்பிணியாகவும் இருந்தார். அடித்தது மல்லாமல் ஒட்டகத்திலிருந்து உதைத்து கீழே தள்ளியவனும் ஹாபர் பின் அல் அஸ்வத்தான். இதனால் அண்ணலாரின் அருமை மகள் ஜைனபுக்கு கருக் கலைந்து குற்றுயிரும் குலையுயிருமாகிறார்...

# மன்னித்தே மனங்களைக் கொள்ளக் கொண்டவர்!

அண்ணலார் (ஸல்) அவர்கள் கருணைக் கடலாக இருந்தார். பகைவரையும் மன்னிக்கும் மாண்பாளராக இருந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் ஒரு தடவைகூடச் சொந்தக் காரணங்களுக்காக எவரையும் பழிவாங்கியது கிடையாது.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "அவர் கொந்தளித்துப் போயோ, வரம்பு மீறியோ, ஆபாசமாகவோ என்றுமே பேசியதில்லை. தீமைக்கு தீமையைக் கொண்டு பதில் அளிக்கமாட்டார். மன்னித்துவிடுவதே அவரது இயல்பாக இருந்தது".

குறைஷிகள் அவருக்கு பல்வேறு கட்டங்களில் தொல்லை தந்தார்கள். எரிச்சலூட்ட முயன்றார்கள். மற்றவர்களிடம் சத்தியத்தை எடுத்துச் சொல்லி விளக்க முற்படும்போது பேரிரைச்சல் ஏற்படுத்தி கேட்பவர்களின் கவனத்தை சிதறடிக்க முயல்வார்கள். சீட்டியடித்தார்கள். அவர் போகும்போதும் வரும்போதும் வழியில் நின்று வார்த்தைகளால் வதைத்தார்கள். பாதையில் முட்களை வைத்தார்கள். பட்டப் பெயர் சூட்டி இகழ்ந்தார்கள்.

கொலையே செய்ய முற்பட்ட போது அண்ணலார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். மதீனாவிலும் அவரை நிம்மதியாக இருக்க விடவில்லை. பலமுறை படையெடுத்துச் சென்று போர் தொடுத்தார்கள்.

இப்படிச் சொல்லொண்ணாத் தொல்லைகள் கொடுத்த போதிலும் அண்ணலார் (ஸல்) வெற்றியாளராக பத்தாயிரம் வீரர்களுடன் மக்காவிற்குள் நுழைந்த போது யாரையும் பழிவாங்கவில்லை. மன்னித்துவிட்டார்கள் அனைவரையும்! பலமுறை படையெடுத்து வந்த அபூசுஃப்யானையே மன்னித்துவிட்டார்கள். அபூசுஃப்யான் வீட்டில் தஞ்சம் புகுபவர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக பிரகடனம் செய்தார்கள்.

அண்ணலாரின் வாழ்வு முழுவதிலும் இந்த மன்னிக்கும் மனோபாவம் எடுப்பாக இருந்தது. மனிதர்களை மன்னித்தே மனங்களைக் கொள்ளைக் கொண்டவர் அவர்.

மதீனாவில் இருந்த யூதர்கள் தொடர்ந்து முஸ்லிம்களுக்கெதிராக சதிச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்களையும் அண்ணலார் (ஸல்) மன்னித்து விடுகின்றார். அவர்களுடன் மென்மையாகவே நடந்து கொள்கின்றார்.

உஹது போர்க் களத்தில் அண்ணலாரின் அருமைச் சித்தப்பாவான ஹம்ஸாவைக் கொன்ற அபிசீனிய அடிமை மக்கத்து வெற்றிக்குப் பிறகு மனம் மாறி இஸ்லாத்தை ஏற்று அவரிடம் வருகின்றான். அவனை மன்னித்துவிடுகின்றார் நபி (ஸல்) அவர்கள். அதே உஹதுக் களத்தில் ஹம்ஸா (ரலி) அவர்களின் உயிரற்ற உடலைப் பிளந்து இதயத்தையும் ஈரலையும் மென்று துப்பும் கொடுஞ்செயலைச் செய்தவள் ஹிந்தா. ஹிந்தாவும் மக்களோடு மக்களாக வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவுகிறாள். அண்ணலார் (ஸல்) அவர்கள் அவளை அடையாளங் கண்டு கொள்கிறார். ஆனால், அவளைக் கண்டித்து ஒரு

வார்த்தை சொல்லவில்லை. அண்ணலாரின் பரந்த உள்ளம் கண்டு அவள் மிகவும் உணர்ச்சி வசப்படுகின்றாள். "ஓ! இறைத்தூதரே! உம்முடைய வீட்டைவிட வேறெதுவும் பாழடைந்த வீடாக எனது பார்வையில் இருந்ததில்லை. ஆனால், இன்று உமது வீட்டைவிட அழகான அன்பான வீடு வேறெதுவும் இல்லை".

இஸ்லாத்தின் கொடிய எதிரியான அபுஜஹலின் மகன் இக்ரிமா. அண்ணலாரையும் இஸ்லாத்தையும் தீவிரமாக எதிர்த்தவர். மக்கத்து வெற்றிக்குப் பிறகு அவர் பயந்துபோய் ஏமன் நாட்டுக்குச் சென்று விடுகிறார். ஆனால், இஸ்லாத்தை ஏற்றுவிட்ட அவரின் மனைவி அவரை அண்ணலாரிடம் அழைத்து வருகின்றார். இக்ரிமாவை மன்னித்துவிட்ட அண்ணலார், "அயல்நாட்டுக்குச் சென்ற குதிரை வீரரே வருக!" என்று அவரை வரவேற்கின்றார்.

சுப்வான் பின் உமைய்யா ஒரு கொடிய இஸ்லாமிய விரோதி. மக்கத்து குறைஷித் தலைவர்களில் ஒருவர். கணக்கிலடங்கா பொருள் தருவதாக வாக்களித்து அண்ணலாரைக் கொல்வதற்காக உமீர் பின் வஹாப் என்பவரை மதீனாவுக்கு அனுப்பியவர் சுப்வான். மக்கத்து வெற்றியின் போது சுப்வான் ஜித்தாவுக்கு ஓடி விடுகின்றார். அங்கிருந்து ஏமன் நாட்டுக்குச் சென்று விடுவது அவரது திட்டம். இஸ்லாத்தை ஏற்றுவிட்ட உமர் பின் வஹாப் அண்ணலாரிடம் வருகின்றார். "ஓ! இறைத்தூதரே! சுப்வான் பின் உமைய்யா தனது குலத்துக்கு தலைவராக இருந்தவர். பயந்து போய் ஓடிவிட்டார். அவர் கடலில் விழுந்து தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளக்கூடும்" என்கிறார். சுப்வானுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. மக்கா திரும்பிய சுப்வான் தனக்கு இரண்டு மாத அவகாசம் வேண்டும் என்கிறார். நான்கு மாத அவகாசம் தரப்படுகிறது. அவர் சுயமாக இஸ்லாத்தைத் தழுவுகிறார்.

ஹபார் பின் அஸ்வத் கல்நெஞ்சம் படைத்த தீவிர எதிரி. அண்ணலாரின் அன்பு மகள் ஜைனபை இவன் அடித்த அடியை யாரும் மறந்துவிடமுடியாது. அவனது அடியால் மயங்கிவிழுந்தார் ஜைனப். அப்போது ஜைனப் கர்ப்பிணியாகவும் இருந்தார். அடித்ததுமல்லாமல் ஒட்டகத்திலிருந்து உதைத்து கீழே தள்ளியவனும் ஹபார் பின் அல் அஸ்வத்தான். இதனால் அண்ணலாரின் அருமை மகள் ஜைனபுக்கு கருக் கலைந்து குற்றுயிரும் குலையுயிருமாகிறார். இதுபோல் பல குற்றங்களைச் செய்தவன் அவன். முதலில் பாரசீகத்திற்குச் சென்றுவிடவே ஹபார் விரும்பினான். அண்ணலாரின் மன்னிக்கும் குணத்தை அறிந்து மக்காவுக்குத் திரும்பினான் ஹபார். ஹபாரையும் மன்னித்துவிடுகின்றார் மாநபி (ஸல்).

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போதுகூட எண்பதுபேர் கொண்ட ஒரு கும்பல் தன்ஈம் மலையடிவாரத்திலிருந்து இரவு நேரத்தில் முஸ்லிம்களை நோக்கி முன்னேறி வந்தது. அண்ணலாரைக் கொல்வதே அவர்கள் நோக்கமாகும். நபித்தோழர்கள் அந்தக் கும்பலை வளைத்து பிடித்துவிடுகின்றார்கள். அவர்களனைவரையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன்பு அழைத்துவரப்படுகின்றார்கள். முகம் வெளிறி பீதியில் உறைந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற அவர்களை அன்பே உருவான அண்ணலார் (ஸல்) மன்னித்துவிடுகின்றார்கள். வன்நெஞ்சர்களின் இதயங்கள் பனித்துளியாய்க் கரைந்து கன்னங்களை நனைக்கிறது.


கைபரில் ஒரு யூதப் பெண் அண்ணலாரின் உணவில் விஷத்தைக் கலந்துவிடுகின்றாள். அண்ணலார் (ஸல்) அவர்கள் உணவைச் சுவைத்தவுடனேயே விஷம் கலந்திருப்பதை அறிந்துகொள்கின்றார். யூதர்கள் அழைத்து வரப்படுகின்றார்கள். விசாரணையில் விஷம் கலந்ததை ஒப்புக்கொள்கின்றனர். அண்ணலார் (ஸல்)



முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுக்கும்படி தொடர்ந்து தூண்டி வந்தவன் அப்துல்லாஹ் இப்னு உபை. ஆயிஷா (ரலி) அவர்கள் மாலையைத் தொலைத்த சம்பவத்தை வைத்து அபாண்டமாக பொய்ப் பிரச்சாரம் செய்தவனும் இவனே. அவனையும் மன்னித்தார் அண்ணல் (ஸல்)

அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. மன்னித்துவிடுகின்றார்கள்.

அண்ணலாருக்கு எதிராக கூடிப் பேசிச் சதி செய்வதற்காக மஸ்ஜிதே திராரைக் கட்டியது அப்துல்லாஹ் இப்னு உபை. "மேலும், அவர்களில் சிலர் ஒரு பள்ளிவாசலை உருவாக்கியிருக்கின்றார்கள். எதற்காகவெனில், (சத்திய அழைப்பிற்கு) ஊறு விளைவிக்க வேண்டும் (அடிபணிவதற்குப் பதிலாக அவனை) நிராகரிக்க வேண்டும். மேலும் நம்பிக்கையாளர்களுக்கு இடையே பிரிவினையை ஏற்படுத்த வேண்டும். மேலும் இதற்கு முன் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்த்துக் கொண்டிருந்த ஒருவனுக்குப் பதுங்குமிடமாக்க வேண்டும் என்பதற்காக! (குர்ஆன் 9:107)


MARHABA ENTERPRISE SDN. BHD
Licensed Money Changer
G 43 Kuala Lumpur Plaza, Jalan Bukit Bintang,
55100 Kuala Lumpur, Malaysia.
Tel: 03 2141 6988
Fax: 03 2144 0572

முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுக்கும்படி தொடர்ந்து தூண்டி வந்தவனும் இந்த அப்துல்லாஹ் இப்னு உபைதான். ஆயிஷா (ரலி) அவர்கள் மாலையைத் தொலைத்த சம்பவத்தை வைத்து அபாண்டமாக பொய்ப் பிரச்சாரம் செய்தவனும் இவனே.

ஆனால், இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அண்ணலார் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் இப்னு உபையை மன்னித்துவிடுகின்றார்கள். அவனுடன் நல்ல முறையிலேயே நடந்துகொள்கின்றார்கள்.

பகைவர்களை பழி வாங்கத் துடிப்பது பொதுவாக எங்கும் காணப்படுகின்ற ஒன்று. ஆனால், அண்ணலார் (ஸல்) அவர்கள் எவரையும் பழிவாங்கியதே இல்லை. தனது எதிரிகளை மன்னித்துவிடுவது அவருக்கு எளிதாக இருந்தது. அவர்களை கண்ணியத்துடன் நடத்தினார். “பழி வாங்கும் சக்தியைப் பெற்றிருந்தும் அக்கிரமக்காரர்களை மன்னித்துவிடும்படி இறைவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான். இன்னும் தொடர்பை விலக்கிக் கொள்பவனுடன் தொடர்பை வளர்த்துக் கொள்ளவும், கொடுக்காமல் முகம் திருப்பிக் கொள்பவனுக்கு கொடுக்கவும் இறைவன் கட்டளையிட்டுள்ளான்” என்றார் அண்ணலார் (ஸல்).

தனது பகைவர்களை பழிவாங்காதது மட்டுமல்ல அவர்களுக்காக பிரார்த்தனையும் செய்தார் அண்ணலார். அண்ணலார் (ஸல்) அவர்கள் தமது எதிரிகளை பழித்துப் பேசியதும் இல்லை. உஹதுப் போர்க்களத்தில் அவர் தம் நான்கு பற்களை இழக்க நேர்ந்தது. தலையிலும் முகத்திலும் காயம் வேறு. அவரது தோழர்கள் துக்கத்திலும் கோபத்திலும் துடித்து எதிரிகளைப் பழித்து சாபமிடுமாறு அண்ணலாரைக் கேட்டுக் கொண்டார்கள். “நான் மக்களைப் பழிப்பதற்காக வரவில்லை. அவர்களை இறைவழியின்பக்கம் அழைக்கவ வந்தேன்” என அமைதியாகச் சொன்னார் அண்ணலார் (ஸல்).

அண்ணலார் (ஸல்) எப்படியிருந்தார்கள் என்று ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்ட போது, அவர் ஒரே வார்த்தையில் பதிலளித்தார் “குர்ஆனாக”.

குர்ஆனிய கட்டளைகளைச் செயல்படுத்துவதிலும் முன்னவராகத் திகழ்ந்தார் அண்ணலார். மற்றவர்களின் குறைகளை மன்னித்துவிடுமாறு குர்ஆன் கூறுகின்றது. அண்ணலார் (ஸல்) அதன்படியே நடந்தார்கள்.

“அவர்களை மன்னித்து விட வேண்டும்; பொறுத்துக் கொள்ள வேண்டும் என நீங்கள் விரும்புவதில்லையா” (குர்ஆன் 24:22)

மேலும், “அவர்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும், மக்(களின் தவறு)களை மன்னித்துவிடுவார்கள். இத்தகைய உயர்ந்த பண்பினோரை அல்லாஹ் நேசிக்கின்றான்.” (குர்ஆன் 3:134)

பகைவர்களை பழி வாங்கத் துடிப்பது பொதுவாக எங்கும் காணப்படுகின்ற ஒன்று. ஆனால், அண்ணலார் (ஸல்) அவர்கள் எவரையும் பழிவாங்கியதே இல்லை. தனது எதிரி-களை மன்னித்துவிடுவது அவருக்கு எளிதாக இருந்தது. அவர்களை கண்ணியத்துடன் நடத்தினார்...

ايروجاياسنديرين برحد
AEROJAYA SDN.BHD
NATIONAL
eTiQa Insurance
Authorized Insurance Agency
Scout's HQ Building, (Near Supasave Gadong), P.O.Box: 1272, Gadong BE3978
1st Flr Immigration Building. Tel/Fax: (673) 2384204.
4th Flr Labour Dept. Tel/Fax: (673) 2380005. Negara Brunei Darussalam
**Contact: Misbahudeen@Hj. Sudin (Managing Director) +673 8759090/+673 7189090**





# ஜோகூர் மலபார் முஸ்லிம் ஜமாஅத்தின் மஆல் ஹிஜ்ரா விருதுகள்!

நடந்த ஜனவரி 2ஆம் நாள் ஜோகூர் மலபார் முஸ்லிம் ஜமாஅத் உலுதிராம் பகுதியில் ஹிஜ்ரி புத்தாண்டை முன்னிட்டு தோக்கோ மஆல் ஹிஜ்ரா விருது வழங்கும் விழாவை சிறப்பாக நடத்தியது. கிட்டத்தட்ட 500க்கும் அதிகமானோர் கலந்துகொண்ட அந்த விழாவில் வழக்கமான துஆ, வரவேற்பு, விருந்து, கோலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளோடு தோக்கோ மஆல் ஹிஜ்ரா விருதளிப்பும் நடைபெற்றது.

இவ்விழாவில் J.M.M.M.N.J எனப்படும் ஜோகூர் மாநில மலபார் முஸ்லிம் ஜமாஅத் நிலையிலான விருதைப் பெற்றுக் கொண்டவர் இன்சே அப்துல் ஸலாம் பின் காசிம்.

தோக்கோ இந்திய முஸ்லிம் விருதை துவான் ஹாஜி முஹம்மது சாலிபு பின் முஹம்மது யாகூபுக்கு வழங்கப்பட்டது.

தோக்கோ மலபார் விருது, துவான் ஹாஜி அப்துல் ரஹீம் பின் மாமுவிற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவர்கள் மூவருமே ஜோகூர் மாநில இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு பல்வேறு தொண்டுகளைப் புரிந்திருக்கிறார்கள் என்று ஜோகூர் மலபார் முஸ்லிம் ஜமாத்தின் பொதுச் செயலாளர் ஹுசேன் தெரிவித்தார்.

கம்போங் சுங்கைதிராம் ஜோகூர் மதரஸத்துல் முஹம்மதியா ஒத்துழைப்போடு மலபார் ஜமாஅத் இந்த விழாவை நடத்தியது. விருது பெற்ற அனைவருக்கும் நமது வாழ்த்துகள்.




# சென்னையில் புதியதொரு புத்தக மையம்!




வெளிநாட்டு வாழ் முஸ்லிம்கள் தமிழகத்துக்குச் சென்றால் ஒரே இடத்தில் எல்லா வகையான இஸ்லாமிய நூல்களையும் வாங்க முடியவில்லையே என்ற பல நாள் ஏக்கத்தை போக்கும் விதமாக புதியதொரு புத்தக மையம் ஒன்று கடந்த மாதம் சென்னையில் திறக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கு சிதறியுள்ள முஸ்லிம் பதிப்பகங்களின் நூல்களை ஒரே இடத்தில் அமைதியான சூழ்நிலையில் பார்த்து வாங்குவதற்கு வசதியாக புதிய புத்தக மையம் ஒன்றை சென்னை ரஹ்மத் அறக்கட்டளை திறந்துள்ளது.

இஸ்லாமிய மூலாதார நூல்களான ஸஹிஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஜாமிஉத் திர்மிதி, தஃப்சீர் இப்னு கசீர் ஆகியவற்றை தமிழ்கூறும் நல்லுலகுக்கு வழங்கிவரும் முன்னோடி நிறுவனமான ரஹ்மத் அறக்கட்டளை ஆங்கிலம், தமிழ் நூல்களுக்காக பிரத்தியேகமாக ஒரு நூல்களின் சங்கமத்தை உருவாக்கி இருக்கிறது. கடந்த ஜனவரி 10 ஆம் நாள் மாலை இப் புத்தக நிலையத்தை அறிவியல் அறிஞரும், சந்திராயன் ஏவுகணைத் திட்ட இயக்குனருமான திரு. மயில்சாமி அண்ணாதுரை திறந்துவைத்தார்.

கவிக்கோ ஹாஜி அப்துல் ரஹ்மான், கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் மு. மேத்தா, கவிஞர் சிற்பி பால சுப்ரமணியம் ஆகியோர் நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியை இலங்கை பி.ஹெச். அப்துல் ஹமீத் நெறிப்படுத்தினார். இப் புத்தக நிலையம் நகரின் மையப் பகுதியில் அமைந்திருப்பதோடு, சர்வதேசத் தரத்துடன் சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளுடன் குளிர்சாதனை வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.



# Topaz

## Freehold

Double-Storey Semi-D

40'x75'



A unique FREEHOLD project in an iconic living place of Saujana impian, Kajang. Consisting of 50 units of modern design Semi-Detached Houses surrounded by an established and matured township combined with comprehensive amenities and convenience. A HOME awaiting for you after a day of hustle and bustle, a neighbourhood surrounded by the greenery and serenity and indulge yourself with a sense of tranquility.

### Enhanced-Features:

- Air-Cond points c/w refrigerant pipes
- 12' ceiling height for ground floor
- 3 phase wiring
- Home security alarm point
- 600mm x 600mm polished tiles
- Underground cabling
- Laminated floor board to bedrooms & staircase




For further enquiries, please call

Sales office is opened daily from 10.00am - 6.00pm.

**BANDAR SUBANG SDN BHD** (114944-K)

**SUBSIDIARY OF FARLIM GROUP (M) BHD** (Co. No. 82275-A)

No. 2-8, Bangunan Farlim, Jalan PJS 10/32, Bandar Sri Subang, 46000 Petaling Jaya

Tel: 603-5635 5533 Fax: 603-5633 2833/5632 7814 Website: http//www.farlim.com.my

• **Developer's License No** : 3963-9/10-2013/1147 • **Validity Period** : 11-10-2010 **To** : 10-10-2013 • **Advertising & Permit No** : 3963-9/2046/2011(10) • **Validity Period** : 20-10-2010 **To** : 19-10-2011
• **Expected Date Of Completion** : November 2012 • **Tenure Of Land** : Freehold • **Land Encumbrances** : Bank Kerjasama Rakyat Malaysia Berhad • **No Of Units** : 50 Units
• **Selling Price** : Min RM790,000 – Max RM955,700 • **Building Plan Approving Authority** : Majlis Perbandaran Kajang • **Approval Plan No** : MPKj IP/9/2010

The information contained in this advertisement is subject to change and cannot form part of an offer or contract. All renderings are artist's impression only. All measurements are approximate. While every reasonable care has been taken in preparing this advertisement, the developer cannot be held responsible for any inaccuracy. All the above items are subject to variations, modifications and substitutions as may be required by the Authorities or recommended by the Architect or Engineer.



நயீம் நாசிர்

# நினைவாற்றலை மேம்படுத்துங்கள்!

மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் தாங்கள் பலவீனமடைந்து விட்டதாகக் கருதத் தொடங்கிவிடுகிறார்கள். இது இயல்புதான். ஆனால், தேவையற்றது. தங்கள் முதுமையில் நிராகரிக்க வேண்டிய ஒரே அம்சம் எண்ணிக்கைதான். அதாவது தங்கள் வயதின் எண்ணிக்கை. எத்தனை வயது என்ற எண்ணிக்கை ஆவணங்களுக்குத்தான் வேண்டுமே தவிர, நமது செயல்களுக்கு அல்ல. தாங்கள் எப்போதும் இளமையோடு இருப்பதாக நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். குறிப்பாக நமது நினைவாற்றல் திடமாக உள்ளது என்ற எண்ணம் மனதுக்குள் எப்போதும் தேவை. அதுதான் நம் நினைவாற்றலைத் திடமாக வைத்துக் கொள்வதற்கான முதல்படி.

1. நான் அடிக்கடி பெயர்களையும் நிகழ்ச்சிகளையும் தேதிகளையும் எண்களையும் மறந்துவிடுகிறேன் என்ற எண்ணத்தை முதலில் களைந்தெறியுங்கள். அது உண்மை அல்ல என நம்பி, அந்தக் கவலையை அழித்துவிடுங்கள். இயற்கையாகவே உங்கள் நினைவாற்றல் மேம்படும்.
2. அடுத்த கட்டமாக மூளைக்குப் பயிற்சி அளிப்பது. உங்கள் மூளைக்குள் புதிய சிந்தனைகளைப் புகுத்திக் கொண்டே இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இசை ஆர்வலராக இருந்தால் புதிய கருவி அல்லது மெட்டு அல்லது பாடலைப் பயிற்சி செய்யலாம். விளையாட்டில் ஆர்வமிருந்தால் புதிய 'கேம்' ஏதாவது ஆடலாம். எழுத்தாளராக இருந்தால் புதிய கவிதை – கட்டுரை – கதை வாசிக்கலாம் அல்லது எழுதலாம். இதெல்லாம் நமது மூளைக்குப் புதிய கிளர்ச்சியாகவும் பயிற்சியாகவும் அமையும்.
3. அழுத்தத்தைக் குறையுங்கள். அர்த்தமில்லாத அழுத்தங்கள் நமது ஆரோக்கியத்தையும் அதே சமயத்தில் நினைவையும் பாதிக்கும். அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதும் ஒருவிதப் பயிற்சிதான். அழுத்தத்தை அடியோடு அகற்றுவது அசாத்தியம்தான். ஆனாலும் கட்டுப்படுத்த முடியும். நிதானத்தைக் கைக்கொள்ளுங்கள். உடற்பயிற்சியும் தியானமும் பேருதவியாக இருக்கும்.
4. நன்றாகச் சாப்பிடுங்கள். சரியான உணவையே உண்ணுங்கள். உணவுடன் கூடுதல் சத்தான வோர்த் தொடர்பான மாத்திரைகள் மார்க்கெட்டில் உள்ளன. அது போக, பொரோக்கோலி, புளூபெரிஸ், கீரைகள் போன்ற மூளைக்கு ஊட்டம் தரும் காய்கறிகளையும் ஒமேகா – 3 வகை எண்ணெய்களையும் உட்கொள்ளுங்கள்.
5. கிரகிக்கும் தன்மையை மேம்படுத்துங்கள். நினைவாற்றல் குறைந்ததால் என்றில்லாமல் எதையும் கண்டு, கேட்டு, உற்றறியும் (observing) ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் பயிற்சி வேண்டும். மக்களைச் சந்திக்கும் நிகழ்ச்சியை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். ஒரு புதிய நபரைச் சந்திக்கும் போது அவருடைய பெயரை பேருக்குக் கேட்டுக் கொண்டு வேண்டுமென்றே மறந்துவிடுகிறோம். அதன் விளைவாக சந்திப்பு நிகழ்ச்சியையும் மறந்துவிடுகிறோம். அந்த அலட்சிய பாவத்தைத் துடைத்தெறியுங்கள். கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். முயற்சி செய்தால் அதுவும் முடியும், அதே சமயத்தில் நம் நினைவாற்றலும் பெருகும்.
6. அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். எந்த நினைவும் குறுகிய காலத்தில் மறந்துபோக வாய்ப்பு உண்டு. எடுத்துக்காட்டாக, தொலைபேசி எண்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு அந்த எண்களையும் பேசியவர் பெயரையும் கொஞ்சம் சிரமப்பட்டு மனத்தில் பதித்துக் கொண்டால் பிறகு அதை இலேசில் மறந்துவிடமாட்டோம்.
7. எதை மறக்கக்கூடாது என நினைக்கிறீர்களோ, அதைக் கொஞ்சம் சிரமப்பட்டு திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டால் எளிதில் மறக்க மாட்டீர்கள். அதற்காகக் கொஞ்சம் முயற்சி தேவை, அவ்வளவுதான். அப்படியும் மறந்துவிடுவோம் என பயந்தால், (உதாரணத்துக்கு உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் பிறந்த தேதியை) உங்கள் டைரியிலோ தொலைபேசியிலோ குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள்.
8. வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். அடிக்கடி (சாவியோ, கண்ணாடியோ) தேவைப்படும் பொருள்களை குறிப்பிட்ட இடத்திலேயே வையுங்கள். இடத்தை மாற்றிக் கொண்டிருக்காதீர்கள். அது தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும். இத்தகைய பயிற்சிகள் இருந்தால் மறதி என்ற பேச்சுக்கே இடமில்லை. முயன்று பாருங்கள்.

சிறுகதை

மருதூர் ஏ. மஜீத்



# சுமப்பது தெரியாத சுமைதாங்கி!

அன்று வெள்ளிக்கிழமை. இலேசான மழைத்தூறல். பாடசாலை செல்லும் பிள்ளைகள் தலைக்கு மேல் புத்தகங்களைத் தூக்கிப் பிடித்தவண்ணம் ஓடிக் கொண்டிருக் கிறார்கள். நானும் எனது தினசரி வேலைகளில் ஒன்றான பேரப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.

பத்திரிகை வாங்கி வருவது, பால் வாங்குவது, சந்தைக்குச் சென்று வருவது போன்றவற்றையும், தேவை யேற்படும் போது பக்கத்துச் சில்லறைக் கடைக்குச் சென்று வெட்கப்படாது சின்னப்பிள்ளை போன்று மனைவி சொல்வதை வாங்கி வந்து அவ் கையிலே கொடுத்து ஒரு புன்சிரிப்பாக முகத்தைப் பார்ப்பது எனப் பல வேலைகளை செய்வது என் வழக்கம்.

பென்ஷன்காரனான எனக்கு இப்படிப்பட்ட வேலைகள் செய்வது பொழுது போக்காகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

கேட் திறக்கும் சப்தம் கேட்டதும் எனது மகள், அல்லது மகன் தனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வருவார்கள் என நினைத்துப் பார்த்தபோதுதான் மைமூன் வருவதைக் கண்டேன்.

நான் மைமூனைக் கண்டு பலநாளாகிவிட்டபடியால் அவளை அங்கலாய்ப்போடு பார்த்தவாறு, “என்ன மைமூன் நீண்ட நாளைக்குப் பிறகு இந்தப் பக்கம்” என்ற கேட்டேன்.

அவள் எதுவும் பேசாது விறுவிறுவென்று நடந்து வந்து வராந்தாவில் குந்திக் கொண்டாள்.

நான் அவளை உற்று நோக்கினேன். அவள் மீதிருந்த அனுதாபம் தினம் தினம் ஏறும் வாழ்க்கைச் செலவு போல அவளைப் பார்த்ததும் உச்சமாகியது. அதனால் அவளது வாழ்க்கையை இரை மீட்டத் தொடங்கினேன்.

சாய்ந்தமருதூரில் ஒரு போடி குடும்ப அழிபாட்டின் அடிமண்டியே மைமூன். தாய்க்கு ஒரே மகள். திருமணம் செய்து ஆறு மாதத்திற்குள் தனது

கணவனையும், ஒரு வருடத்திற்குள் தனது தந்தையையும் இரண்டு வருடத்திற்குள் தனது தாயையும் இழந்து பரம்பரை வியாதிக்கு ஆளாகி பைத்தியமாய் அலைகிறாள். அவளது வீடுதான் ஒரு காலத்தில் கல்வீடு எனப் பெயர் பெற்றது. இன்று பாழடைந்து கிடக்கிறது.

மைமூன் சிரிப்பதற்கு சம்பவங்களோ, சங்கதிகளோ மனிதர்களோ எதுவுமே தேவையில்லை. ஆட்டை, மாட்டை எதைக் கண்டாலும் சிரிப்பாள். சிரிப்பென்றால் கலகல என்ற சிரிப்பல்ல. இலேசான புன்முறுவல். அவ்வளவுதான். இதனை எந்த நேரமும் சிரித்த முகம் என்று கூடக் கூறலாம். தென்கிழக்கில் உள்ள முஸ்லிம் ஊர்கள் அனைத்திலும் அவளைத் தெரியாதவர்கள் இல்லையென்றே கூற வேண்டும்.

சிறு பிள்ளைகளை மைமூனைக் கண்டால் அவள் பின்னால் சென்று கேலி கிண்டல் செய்து ஆரவாரித்து கூக்குரலிடுவார்கள். பின் அது எப்படியோ குறைந்துவிட்டது. இப்பொழுதெல்லாம் பிள்ளைகள் இவளைக் கண்டால், ''பாவம் மைமூன் ராத்தா'' எனக் கூறி அன்பு காட்டுகிறார்கள்.

பல வருடங்கள் எண்ணெய் காணாது அழுக்குப் படிந்து சிக்காகிக் கிடக்கும் தலைமுடி. வட்டமுகம். அதிலே வடிவான கண்ணிரண்டு.

கண்களிலே கருணை பாய் விரித்துப் படுத்துக் கிடக்கிறது. வெற்றிலைப் போட்டு பழுப்பேறிய பற்கள். குயவன் சூளையில் இட்டுச் சுடுவதற்கு முன் அவனால் செய்யப்பட்ட சட்டி பானைகளின் நிறத்தை ஒத்த கறுப்புமல்லாத வெள்ளையுமல்லாத அழகான கவர்ச்சியான களி மண்நிறம். அவளது ஜக்கட்டின் ஆயுள் காலம் எவ்வளவு என்று கூற முடியாது.

சிலவேளை இரண்டு மூன்று ஜக்கட்டுகளையும் ஒன்றாக அணிந்திருப்பாள். பெண்கள் யாரும் அனுதாபப்பட்டு சேலை கொடுத்திருந்தால் அவளது சேலை அழுக்கற்றுக் காணப்படும். இல்லையெனில் நெருப்பில் போட்டாலும் அவளது சேலை வேகாது எனச் சில பெண்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.


அணிகலன் என்ற வகையில் காதில் மட்டும் பூச்ச மணியைக் கோர்த்து காதுத் துளையுள் நூலால் கட்டி நெடிதாகத் தொங்கவிட்டுள்ளாள். அதிலும் வலம் இடம் இரண்டு பக்கத்திலும் சமன்பாடு கிடையாது.

கையிலே சற்று பெரிதான ஒரு பிச்சை பாத்திரம். தண்ணீரோ, தேநீரோ சில்லறையோ எதைக் கொடுத்தாலும் அந்தப் பாத்திரத்தை நீட்டித்தான் வாங்கிக் கொள்வாள். அவள் விரும்பினால் மட்டும் ஓரிருவார்த்தைகள் பேசுவாள். மற்ற நேரமெல்லாம் ஒரே முணுமுணுப்பு. யாருக்கும் விளங்காது. இத்தனைக்கும் அவளுக்கு வயது முப்பதிற்கு மேல் இருக்காது. ஊர் ஊராய் அலைந்து திரிவது அவளது தினாந்தர வேலை. கிடைத்த இடத்தில் சாப்பாடு, இரவான இடத்தில் படுக்கை, படுக்கையென்றால் தூக்கம் என்பது பொருளல்ல.

மைமூனின் சொந்த இடத்தைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. ஒருசிலருக்கு மட்டும் மைமூன் கரவாகு என்பது தெரியும். மைமூன் காலைக் கடன் கழித்து குளித்துள்ளாளா என்பது யாருக்கும் தெரியாது. இது பரம இரகசியம்.

அன்றாடக் கடமைகளில் ஒன்றான காலைக் கடன்களை முடிக்காவிட்டால் அன்றைய தினம் ஏதோ ஒன்றை இழந்துவிட்டோம் என்பது போன்று நாம் அவஸ்தைப்படுவோம். ஒரு நாள் குளிக்காவிட்டாலும் இதேநிலைதான். ஒரு வேளை சாப்பிடப் பிந்திவிட்டாலும் ஆடிப்போய் நடக்கக்கூட சக்தியில்லாத நிலையேற்பட்டுவிடும். ஆனால், மைமூன்


மைமூன் சிரிப்பதற்கு சம்பவங்களோ, சங்கதிகளோ மனிதர்களோ எதுவுமே தேவையில்லை. ஆட்டை, மாட்டை எதைக் கண்டாலும் சிரிப்பாள். சிரிப்பென்றால் கலகல என்ற சிரிப்பல்ல. இலேசான புன்முறுவல். அவ்வளவுதான்.



வாட்டசாட்டமாகத்தானே இருக்கிறாள். விட்டமின் என்றும் மினரல் என்றும் இவளுக்கு யோசனையாக சாப்பாடு நேரத்திற்கு நேரம் யார் கொடுக்கிறார்கள்?

இவள் மட்டுமல்ல, இப்படிப் பைத்தியமாகித் திரிகின்ற எல்லாருமே இப்படித்தானே வாட்டசாட்டமாக இருக்கிறார்கள்!

மாரடைப்பு, டெங்கி, சிக்கன்குன்யா, நீரிழிவு, மலேரியா... என்று இந்த பைத்திரயக்கார்கள் மருந்து எடுத்ததாகவும், எந்தவொரு ஸ்பெஷலிஸ்டை



சந்தித்ததாகவும் நாம் கேள்விப்படவில்லையே! என்ன இது என்று யோசித்த அதே வேளை இறைவனின் சூட்சமத்தை யார்தான் அறிவார் என்ற முடிவுக்கு வந்தபோது எனது மனைவி, "இந்தா மைமூன் இதைச் சாப்பிடு!" எனக் கூறுவது கேட்டது. மனைவி கையில் வைத்திருக்கும் பாத்திரத்தை உற்று நோக்கினேன்.

எனது பேரப் பிள்ளைகள் இரவு சாப்பிட்டு மிஞ்சிய சோறு கறியெல்லாம் ஒன்றாகக் கொட்டப்பட்டு அப் பாத்திரத்தினுள் எச்சில் போன்று இருந்தது. எனக்கு என்னவோ இது பிடிக்கவில்லை. மைமூன் அதனை வாங்கிக் கொள்ளவும் இல்லை.

"ஏன் மைமூன் சாப்பாடு வேண்டாமா?" என எனது மனைவி கேட்க வேண்டாம் எனத் தலையை மட்டும் ஆட்டினாள் மைமூன்.

"ஏன் பசிக்கலயா? வயிறு பெரிதாக இருக்கு வேறு எங்கேயாயினும் சாப்பிட்டியா?" என்ற மனைவியின் அடுத்த கேள்விக்கு தலையாலேயே "இல்லை" என பதில் சொல்லிவிட்டு வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தவாறு எங்கள் வீட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள் அவள்.

நான் எனது மனைவியைக் கடுகடுப்போடு பார்த்த வண்ணம் இரவு பிள்ளைகள் சாப்பிட்டு மீந்ததைக் கொடுத்தால் அவள் சாப்பிடுவாளா? மனிதருக்குக் கொடுக்கிறதை நல்லதாய்ப் பார்த்துக் கொடுக்க வேணும்" என்றேன்.

என் மனைவி, "அவள் பைத்தியக்காரிதானே! அவளுக்கு நல்லது கெட்டது எங்கே விளங்கப் போகிறது" என்றார்.

"நமக்கு விளங்கும்தானே! அதனால்தான் அப்படிச் செய்யக்கூடாது" என்கிறேன் நான். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் இறைவன் பார்த்த வண்ணமேயுள்ளான். அவள் தலைவிதி அவள் அப்படி அலைகிறாள். இறைவன் இப்படிப்பட்ட தலைவிதியை அவளுக்கு ஏதோ காரணத்திற்காக அல்லது மற்ற மனிதர்களுக்குப் படிப்பினையாக கொடுத்திருக்கலாம். நம்மால் எதனையும் தீர்மானிக்க முடியாது. இப்படி

'பைத்தியக்காரி என்றும் பாராமல் இந்த வேலையைச் செய்திருக்கிறானுகளே... இப்படிப்பட்டவனுகளை தண்ணி இல்லாத இடத்தில் புதைக்கனும்...' இப்படிச் சில பெண்கள்.

"மைமூனிடம் இருந்து பிள்ளையைப் பிரித்து எடுத்து யாரும் வளர்ப்பாங்க... ஆண்புளப் பிள்ளை தானே... அப்படிச் செய்தா நன்மையும் கிடைக்கும்" இப்படிச் சில நல்ல பெண்கள்.

அலைய வேண்டிய பரம்பரையைச் சேர்ந்தவளல்ல இவள். நெல்லுப்பட்டறையில் கோவங்கொடி படர்ந்து கிடந்த பரம்பரையைச் சேர்ந்தவள். எனது தகப்பனார் இவளது பரம்பரையைப் பற்றிச் சொன்னது இன்றும் என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது" எனக் கூறி முடிப்பதற்குள் எனது மகள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தது கதையை நிறுத்திக் கொண்டு பேரப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, பள்ளிக்குப் புறப்பட்டேன் நான்.

இது நடந்து இரண்டு கிழமைகள் கூட ஆகவில்லை. எங்கள் வீட்டில் மட்டுமல்ல, ஊரெங்கும் மைமூனைப் பற்றிய பேச்சுத்தான். அதுவும் பெண்கள் மத்தியில் உக்கிரம். பேச்சின் தலைப்பு, "மைமூன் நேற்று ஒரு பிள்ளைக்கு தாயாகிவிட்டாள்" என்பதுதான்.

பேச்சின் இடையிடையே 'பாவம் பைத்தியக்காரி எப்படிப் பிள்ளை வளர்க்கப் போகிறாளோ' என்று சில பெண்கள் அனுதாபப்பட்டுக் கொண்டார்கள்.

'பைத்தியக்காரி என்றும் பாராமல் இந்த வேலையைச் செய்திருக்கிறானுகளே... இப்படிப்பட்டவனுகளை தண்ணி இல்லாத இடத்தில் புதைக்கனும்...' இப்படிச் சில பெண்கள்.

"மைமூனிடம் இருந்து பிள்ளையைப் பிரித்து எடுத்து யாரும் வளர்ப்பாங்க... ஆண்புளப் பிள்ளை தானே... அப்படிச் செய்தா நன்மையும் கிடைக்கும்" இப்படிச் சில நல்ல பெண்கள்.

"ஆண்டவண்ட வேலையைப் பாரு! எங்க ராத்தா புள்ள இல்லாம நேராத நேர்த்தியில்ல.. போகாத

அவுலியாட அடக்கத்தலமில்லை... காட்டாத டாக்டரு இல்லே. இடிச்சித் தின்னாத தூள் இல்ல... எத்தனையோ வருசமா புள்ள இல்லாம ஏங்கித் தவிக்கிறா! ஆனா பைத்தியக்காரிக்கு ஒரு ஆம்பிளப் பிள்ள! இதுவும் ஆண்டவண்ட கொதறத்துத்தான்..." இப்படி ஒருத்தி.

"ஜெசீமா உனக்கு விசயம் தெரியுமாடி. நேற்று நம்ம ஊர் ஆஸ்பத்திரியில மைமூன் புள்ளப் பெத்துட்டாளாமடி. அழகான ஆம்பிளப்புள்ளயாம்."

"பாத்துமா! உனக்கு யாரடி சொன்னது?"

"எங்க மூத்தம்ம நேத்த ஆஸ்பத்திரிக்கு மருந்தெடுக்கப் போனவ கண்ணால கண்டாளாம். சனமெண்டா ஆஸ்பத்திரி நிறைஞ்சு வழியுதாம். சனத்துக்கெல்லாம் புதினம் தான்.."

"இது புதினமான செய்திதானடி! புருஷன் இல்லாம எப்படிப் புள்ளப் பொறக்கும்" கன்னியர் மத்தியில் நடந்த சம்பாசனை இது.

"பைத்தியமாக அலைஞ்சு திரிகிறானே மம்மு... அவனுக்கும் மைமூனுக்கும் காதலாம். ஒருநாள் இரவு மழைக்குள்ளே மிஸ்கீன்ட கடை விறாந்தையில் இருவரும் படுத்துக் கிடந்ததை நம்ம கரீம் கண்டிருக்கான். அழுக்குச் சீலைக்குள்ள தாண்டா மாணிக்கம்!" இது படித்த இளைஞர்களில் ஒருத்தன்.

"அது சரி இந்த விஞ்ஞான உலகத்தில மக்கு மடையனாய் நடந்திருக்கானேடா, நம்மிட்ட கேட்டா பிள்ளையில்லாமல் நினைத்ததை முடிக்க வழி சொல்லியிருப்போமில்ல" இது அடுத்தவன்.

"பைத்தியக்காரனுக்கு விஞ்ஞானமும், உலகம் போற வேகமும் எங்கே தெரியப் போறது? இதைப் பற்றிப் பேசுற நீதான் மடையன்" எல்லாரும் சேர்ந்து சிரிக்கிறார்கள். படித்த இளைஞர்களிடையே பொழுது போக்கிற்கான ஒரு ஹாஸ்ய விருந்து இந் நிகழ்வு.

"மைமூனுக்கு இப்ப பைத்தியம் தெளிஞ்சிட்டுதாமே. பிள்ளைக்குப்பால் கொடுத்துக் கொண்டிருக்கிறாளாம். புள்ள சரியாக மைமூன்ட மூத்த வாப்பா ஆதம்போடியப் போல இருக்காம். ஆதம் போடிக்கு இடது கையில ஆறு விரல். அது போல மைமூனுடைய பிள்ளைக்கும் இடது கையில் ஆறு விரலாம். அத்தோடு நம்பிட அடுத்த வீட்டு அலிமா நாச்சிக்கிட்ட, பெயர் வெட்டியதும், பிள்ளையும் நானும் எங்க வீட்டிற்குப் போக வேணும். தயவுசெஞ்சி எண்ட வீட்டக் கொஞ்சம் துப்பரவாக்கி வையுங்க. அலிமாராத்தா நன்மை கிடைக்கும் என்று மைமுன் சொன்னாளாம்..." இது எனது மனைவி திரட்டிய தகவல்.

இச் சம்பவங்கள் அனைத்தும் எனது காது வழியே மூளைக்குச் சென்று மனதுக்குள் சிங்காசனமிட்டு இருந்து கொள்கிறது. அதனால், எனது தகப்பனார் சொன்ன சம்பவத்தின் மீதியை இரை மீட்டிப் பார்க்கிறேன்.

"மைமூனுடைய பாட்டனார் ஆதம் போடி இளைஞனாக இருந்தபோது மரியம் என்ற ஏழைக் குமரை ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றி இருக்கிறார். பிள்ளையானதும் அவள் யாரோ நான் யாரோ எனப் பணத்தாலும் செல்வாக்காலும் ஊரை ஏமாற்றி மரியத்தை ஊரை விட்டே துரத்தியதும் அவள் பிள்ளையோடு ஊர் ஊராய் அலைந்து திரிந்ததையும், மரியத்தின் மகனின் மகனே மம்மு என்ற செய்தியும் என்னைப் போல ஒரு சிலருக்கு மட்டுமே தெரிஞ்ச செய்தி. அத்தோடு ஆதம் போடியின் வாரிசு மரியத்தின் வழிவழியாக மைமூனுக்குள் உள்வாங்கப்பட்டு ஆதம் போடியின் பரம்பரை வீட்டினுள் குடிபுக வேண்டுமென்ற இறைநியதியை யாரால்தான் தட்ட முடியும்'

ஒவ்வொரு தாக்கமும் எதிர்தாக்கமுடையது என்ற விஞ்ஞானத் தத்துவம் எப்படிப் பொய்யாக முடியும்? இது தெரிந்தால் மனிதன் பிழை செய்வானா என்ன?" என்று யோசித்தவாறு அன்றைய தினசரியைக் கையில் எடுத்துக் கொண்டு சாய்வுநாற்காலியில் சாய்கிறேன்.

தூக்கத்திற்கு நான் பென்ஷன்காரன் என்பது நன்கு தெரிந்திருந்தது. அதனால் அது அடிக்கடி நேரங்காலம் தெரியாமல் என்னிடம் வந்து போவது வழக்கமாகிவிட்டது.

"மைமூனுடைய பாட்டனார் ஆதம் போடி இளைஞனாக இருந்தபோது மரியம் என்ற ஏழைக் குமரை ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றி இருக்கிறார். பிள்ளையானதும் அவள் யாரோ நான் யாரோ எனப் பணத்தாலும் செல்வாக்காலும் ஊரை ஏமாற்றி மரியத்தை ஊரை விட்டே துரத்தியதும் ..."





# ரிஸ்க் எடுப்பது ரஸ்க் சாப்பிடுவது போலல்ல!

டத்தோ ஹாஜி முஹம்மது இக்பால்

"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு!" மாமனிதர்கள் என்று எவருமே இல்லை. ஒருவருக்கு ஒருவர் திறனில், செயல்படும் முறையில், பலத்தில் இப்படி பற்பல கூறுகளில் ஏதாவது ஒரு வகையில் சிறந்து விளங்கவே செய்கின்றனர். வல்லவர், உயர்ந்தவர் என்ற சிறப்புகளைப் பெற்றவர்கூட நமக்கு மேல் உயர்ந்தவர் உண்டு, அந்தத் திறன்களை நாமும் பெற வேண்டும் என்று நாட்டம் கொள்வது இன்னும் ஒரு படி உயர்வதற்கு வழியமைக்கும். அதாவது, இன்னொரு படிப்பினையை மற்றவரிடமிருந்து பெற முடியும் என்ற அணுகுமுறை தாழ்வு மனப்பான்மை அல்ல!

அறிவியலில், அரசியலில், வாழ்வியலில்... இப்படி ஒவ்வொரு அறிவுசார் துறையிலும் ஒருவரே திறமைசாலியாக இருக்க முடியாது. அப்படி இருந்தாலும் தொடர்ந்து இருப்பது இன்றைய துரித உலகச் சூழலில் சாத்தியப்படாது. எனவே, மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய – கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறையவே உள்ளன.

மாற்றங்கள் நம்மை சூழ்ந்து மனித வாழ்க்கையை, வியாபாரத்தை, விளையாட்டை திக்குமுக்காட வைக்கின்றன. மாற்றங்கள் பெருகி வளர்ந்து வரும் இவ்வேளையில் நின்ற இடத்திலேயே நின்று கொண்டு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தால், மற்றவர் நம்மைக் கடந்து சென்று நம்மை விஞ்சிய வெற்றியாளர்களாக உயர்ந்துவிடுவார்கள். நம் பார்வைக்குட்பட்ட இடத்திலேயே உற்று நோக்கினால், சுற்றமும் நட்பிலும்கூட நம்மைவிட உயர்ந்துவிட்டவர்களை அடையாளம் காண முடியும். நாம்தான் உயர்ந்தவர் என்ற மமதை ஊடுருவியிருந்தால் மாற்றங்களை உணர முடியாது; புரிந்துகொள்ள முடியாது.

ஒரு பழைய வெண்பா இந்தக் கருத்தை இப்படி எடுத்துரைக்கின்றது:

தம்மின் மெலியாரை நோக்கி, தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க தம்மின்
கற்றாரை நோக்கி, கருத்தழிக கற்றவெலாம்
என்றே இவர்க்கு நாம் என்று.

இந்த வெண்பா வரிகள் தற்பெருமையை அடக்கி பணிவுடன் நடக்கும் ஒரு பண்பை வளர்க்கின்றது.

அதே நேரத்தில், நம்மைவிட திறமைசாலிகளை அறிதலும், அவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதும் ஒரு வாழ்வியல் கடமையாகக் கருத வேண்டும்.

ஒவ்வொரு நொடியிலும், ஒவ்வொரு திருப்புமுனையிலும் மற்றவர்களின் – கற்றவர்களின் தகவல் தளங்களின் இணைப்பும் அவசியம்.

"அடடா! எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!" என்ற சொற்களுக்கு இடமிருக்கக்கூடாது. "ஏதோ எனக்குப் பட்டதைச் சொல்லிவிட்டேன். மற்றது உன்பாடு!" என்ற சொற்களில் தகவல் பரிமாற்றம் உண்டு. "சொன்னதற்கு நன்றி" என்று ஒரு வார்த்தை சொல்வதும் கடமை.

அத்தகைய தேடல், தொடர்களில் ஒரு மாற்று சிந்தனை தெரியவரும்; ஒரு புதிய அனுபவம் பாடம் தரும்; ஒரு புதிய பரிமாணம் உருவாகும். உயர்ந்துவிட்டோம், உச்சாணியில் இருக்கின்றோம் என்ற எண்ணமும் மனப்பான்மையும் அமுக்கப்பட்டு, திறந்த, விரிந்த பார்வையும் பழக்கமும் தொடர வேண்டும். அப்போதுதான் மாற்றங்களை எதிர்நோக்கும், மாற்றிய சூழ்நிலையில் இலக்கை அடையும் திறமை உருவாகும்.

இடம்பெறும் படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. கதைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.
Published by YAYASAN PENDIDIKAN ISLAM, Wisma Iqrah, 9, Jalan PJS 8/17, Mentari Business Park,
46150 Petaling Jaya, Selangor Darul Ehsan, Malaysia. Tel: 603 5630 0571 Fax: 603 5630 0570 Email:nambikkai@gmail.com
Layout by: MULTI EDUCATIONAL BOOK ENTERPRISE.
Printed by: SAMPOORNA PRINTERS SDN BHD, NO: 1, JALAN TIB 1/19, TMN. INDUSTRY BOLTON, 68100 BATUCAVES, SELNGOR.




CHENNAI RAHMATH ARAKKATTALAI

# ISLAMIC BOOK CENTRE

The Exclusive English Book Shop

- In 1500 square feet (A/c Showroom)
- Excellent ambience for buying and reading books
- Infrastructure suiting international standards available Parking space
- Centrally located in the heart of the city, Chennai
- More than 2000 titles under 14 various headings
- Books available in English and also in other languages
- Best creations by Islamic Shcolars
- Separate section for Sri Lankan Publications
- CD's Available in all Languages





You can also get books by placing orders on our website: www.rahmath.net

## TOWARDS UNDERSTAND ISLAM

**RAHMATH PATHIPAGAM (CHENNAI) PVT. LTD**
# 6, 2nd Main Road, C.I.T. Colony, Mylapore, Chennai - 600 004.
Tel: +91 44 2499 7373 Mobile: +91 94440 25000
website: www.rahmath.net, E-mail: buhari@rahmath.net

For enquiries please contact: E.M. Usman, Mobile: 95000 25901

# KUMPULAN BARKATH
## Sendirian Berhad (42551-V)

1940 70 Barkath YEARS Penang 2010

## *OUR QUALITY PRODUCTS*




Kumpulan Barkath has been a caring supplier of food, beverages and other consumer products for more than 60 years. Our concentrated fruit juice, medicated cough drops and confectionery have a longstanding reputation for product consistency and quality. A winner of numerous awards, locally and internationally, Kumpulan Barkath has carved a niche in the manufacturing market. In 1995, the group won the prestigious Marketing Management Award presented by the Asian Institute of Management and the Far Eastern Economic Review, Philippines. In July 1997, it received the MSO ISO 9002 certification from SIRIM for the manufacture of Sunquick fruit juice concentrate. In July 2002, it was upgraded to the newest ISO 9001-2000 certification. Sunquick has been rated as the top fruit beverage in Malaysia by AC Nielsen in their 2001 survey. Apart from being a leading regional food manufacturer, importer, exporter and distributor, Kumpulan Barkath has also ventured into property development, investment and communications. The group was awarded the Superbrands Award in 2005. In 2006, it received The Reader's Digest Trusted Brands Gold Award for 2006 in the Juice category and the Anugerah Usahawan Bumiputera Pulau Pinang.


**Corporate office:** BANGUNAN BARKATH, No.21, Beach Street, Corporate Floor 4, 10300 Penang, Malaysia.
Tel: 604-262 6255, 261 8881 Fax: 604-261 2925
**Administration office / Export office:** BANGUNAN BARKATH, No. 21, Beach Street, Corporate Floor 3, 10300 Penang, Malaysia.
Tel: 604-262 6252/3/4 Fax: 604-261 9721, 264 5045
**Website:** www.barkath.com **E-mail:** barkath@barkath.com